பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை 24.11.2023 கதிர் 378

# தமிழரைத் தொடர்ந்து அடக்கி ஒடுக்கவே பாதுகாப்பு தரப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

**தமிழர்களைத் தொடர்ந்தும் அடக்கி ஒடுக்குவதற்காகவே பாதுகாப்புக்கு வரவு செலவுத் திட்டத்தில் எல்லா ஆட்சியாளர்களும் அதிக அளவில் நிதி ஒதுக்கி வருகின்றீர்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் இப்போது தீவிரமடைந்திருக்கும் குற்றச் செயல்களில் ஒன்று காணி மோசடி. காணி விலை உச்சத்தை எட்டியதை அடுத்து காணி மோசடியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. புலம் பெயர்ந்து வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டவர்களின் காணிகளை அபகரிப்பது இதிலொரு வகை. அண்மையில்கூட நாவற்குழியைச் சேர்ந்த இரு பெண்கள் காணி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வெளிநாடு சென்ற ஒருத்தர் திரும்பி வந்து பார்த்தபோது தனது காணி வேறொருவரின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. ☞ 2

## நெல்லியடியிலும் மாவீரர்களுக்கு நினைவாலயம்



யாழ். மாவட்டம் வடமராட்சி - நெல்லியடி மாலிசந்தி பகுதியில் மாவீரர்களின் பெயர் பட்டியல் பொறிக்கப்பட்ட பட்டியல் காட்சிப் படுத்தப்பட்டு மாவீரர்களுக்கு ☞ 2

# அரசமைப்புப் பேரவை விவகாரத்தால் நாடாளுமன்றில் நேற்று கடும் விவாதம்

## ஜனாதிபதி எதிர்க்கட்சியினர் கருத்து மோதல்

அரசமைப்புப் பேரவைக்கு சிறு மற்றும் சிறுபான்மை பிரதிநிதித்துவம் நியமிக்கப்படாமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பந்துல கருணாரட்னவின் நியமனத்தை ஏன் நிறுத்தியுள்ளார்கள் என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது. அந்தப் பெயரை நான் அனுப்பவில்லை. பிரதம நீதியரசரே எனக்கு அந்தப் பெயரை அனுப்பினார். அவர் அனுப்பிய பெயரையே அரசமைப்பு பேரவைக்கு நான் அனுப்பினேன். அவ்வாறு அவரது பெயர் தெரிவு செய்யப்பட்டால் மேன்முறையீட்டு நீதிபதி நியமனத்தைச் செய்ய முடியும். அரசமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் உள்ளே இருந்தவாறு இந்தச் செயற்பாட்டை சீர்குலைப்பார்களாக இருந்தால் எம்மால் இவ்விடயத்தினை முன்னெடுக்க முடியாது.

அடுத்தவாரம் இந்தப் பேரவை தொடர்பில் ஆராய்வதற்காக நாம் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கவுள்ளோம். இல்லாது விட்டால் பொலிஸ் நியமனங்களையோ அல்லது நீதிமன்ற நியமனங்களையோ செய்ய முடியாது. இந்த விடயம் சம்பந்தமாக நான் கடிதமொன்றை சபாநாயகருக்கு அனுப்பினேன். இருவர் வாக்களிக்காத நிலையில் ஏனைய அறுவரும் மூன்று மூன்றாக பிரிந்துள்ளனர். ஒருவர் நியமிக்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் நாம் எவ்வாற ஆட்சியைக் கொண்டு ☞ 9

# பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 66 மேலதிக ஆதரவோடு நிறைவேற்றம்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புஅமைச்சுக்கானநிதி ஒதுக்கீடு 68 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 08 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 142 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப் ☞ 2

# விவசாய பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கவும் அரசிடம் திட்டம் தயார்

இலங்கையில் விவசாய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவவும் திட்டமிட்டுள்ளோம், தற்போதுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. நீங்களும் இதற்கு ஆதரவு வழங்கலாம். இந்தச் செயற்பாடுகளை தொடருமாறு அனைவரையும் அழைக்கின்றோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 25 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருது ☞ 8

# நிரந்தர அரசியல் தீர்வை வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்வோம்

## ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

வடக்குக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்ய இருக்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான குழு நிலை விவாத்தில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு குறித்து ரவூப் ஹக்கீம் காஸா தொடர்பாக ஆற்றிய உரைக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்ய இருக்கிறோம். ஏனெனில் வடக்கில் சிறந்த பொருளாதாரம் ஒன்று இருக்கிறது. குறிப்பாக சுமை பொருளாதாரம், எரிசக்தி தொடர்பான பொருளாதாரம் போன்ற பல வளங்கள் ☞ 9

# நாடு வங்குரோத்து அடைந்ததில் ராஜபக்ஷக்களுக்கு பொறுப்புண்டு

## ரணில் ஒப்புக்கொள்கிறார்

நாடு வங்குரோத்து அடைந்ததில் ராஜபக்ஷக்களுக்கும் பொறுப்பு உள்ளது. இந்தவிடயத்தில் அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளதாக நினைகின்றேன். அந்த காலப்பகுதியில் வாக்குறுதிகளைவழங்கிமக்களை மகிழ்வித்து அரசியல் செய்ய பலர் பழகிக் கொண்டனர். என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவின் பெஸ்ட் போஸ்ட் ஊடக வலையமைப்பின் ஊடவியலாளர் பால்கி சர்மாவுக்கு வழங்கியநேர்காணலில் தெரிவித்தார்.

அந்த நேர்காணலில் அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

கேள்வி: அண்மையில் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்திலும் ☞ 8

# ஆட்கடத்தல் விவகாரம் தொடர்பில் இலங்கை மீது அமெ. குற்றச்சாட்டு

ஆட்கடத்தலை முற்றாக முடிவுக்குக் கொண்டுவருவதற்குரிய குறைந்தபட்ச தராதரங்கள் இலங்கை அரசினால் இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியிருக்கும் அமெரிக்கா, ஆட்கடத்தல் செயற்பாடுகளை முறியடிப்பதற்கு இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளையும் முன்வைத்திருக்கின்றது.

2023ஆம் ஆண்டில் இலங்கையின் ஆட்கடத்தல் நிலவரம் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஆட்கடத்தலை முற்றாக முடிவுக் ☞ 8

# மாவீரர் தினத்தை அனுமதிப்பது கோழைத்தனம் நாடாளுமன்றில் சரத் வீரசேகர கொந்தளிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கதின் மாவீரர் தினத்துக்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல அது கோழைத்தனம் என தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையில் மீண்டும் போர் ஒன்று தோற்றம் பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளார்களா என்பதை ஆராய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண் ☞ 8

# வட்டுக்கோட்டை இளைஞரின் இறப்பு வழக்கில் முன்னிலையாக சட்டத்தரணிகளுக்கு அழைப்பு

## அனைவரும் பங்கேற்கவேண்டும் என்கிறார் சிறீகாந்தா

நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சுகவீனமடைந்து உயிரிழந்தமைக்கு வட்டுக்கோட்டைப் பொலிஸார் அவரைத் தாக்கியமையே காரணம் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில், இறந்தவருக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் நீதிமன்றில் முற்படவேண்டும் என்று மூத்த சட்டத்தரணியான ந.சிறீகாந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

திருட்டுச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு வட்டுகோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வட்டுக்கோட்டைமயைச் சேர்ந்த அலெக்ஸ் கடுமையாகத் தாக்கப்பட்டதனால் அவர் சுகவீனமுற்று உயிரிழந்தார் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்குவரவுள்ள நிலையில் உயிரிழந்த இளைஞருக்கு ஆதரவாக அவரது சார்பில் 35;க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றில் முற்படவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே அனைத்துச் சட்டத்தரணிகளும் உயிரிழந்தவருக்கு ஆதரவாக அணிதிரளவேண்டும் என்று சிறீகாந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

இறப்பதற்கு முன்னர் இளைஞர் பேசிய காணொளிப் பதிவொன்றில், பொலிஸார் தன்னைச் சித்திரவதை செய்தனர் என்று கூறியிருந்தார். இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனையில் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து அவர்கள் இரு பெண்களையும் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே காணி மோசடிகள் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவங்களும் பல நிகழ்ந்துள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலேயே உரிமை கோரப்படாத அல்லது உரிமையாளர்கள் யார் என்பதை முழுமையாக அடையாளப்படுத்த முடியாத காணிகள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரம் போன்ற கோயில்களுக்கென சாட்டுதல் செய்யப்பட்ட காணிகள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளும் அவர்களுடன் சேர்ந்தவர்களும்கூட இந்தக் காணி அபகரிப்புக்களில் ஈடுபட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்டு.

பொம்மைவெளி போன்ற பகுதிகளிலும் இத்தகைய காணி மோசடிகள் அண்மைக் காலமாகத் தீவிரமடைந்துள்ளன என்று அங்குள்ள மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. அங்குள்ள சில காணிகளைச் சிலர் உரிமை கோரி வருகின்றபோதும் அதற்குரிய முறையான ஆவணங்களை அவர்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் கையளிக்கவில்லை. மொம்மைவெளியில் உள்ள காணிகளை அரசுடமையாக்கி அங்குள்ளவர்களுக்கு அரச வீடமைப்புத் திட்டங்களைச் செயற்படுத்திக்கொடுக்க முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காகக் காணிகளைச் சுவீகரிப்பதற்குரிய அறிவித்தலும் பிரதேச சபையால் வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டிருப்பதாக ஒரு பேச்சு இருக்கின்றபோதும் அது தொடர்பில் எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் இதுவரையில் விடுக்கப்படவில்லை. இதற்கிடையில் அந்தப் பகுதியில் உள்ளவை தமது காணிகள் என்று தெரிவித்து சிலர், பத்துக்கும் மேற்பட்ட காணித் துண்டுகளை அங்கே குடியிருப்பவர்களுக்கு பல லட்சம் ரூபாய்களுக்கு விற்றுவிட்டனர். தன்னைக் காணி உரிமையாளர் என்று கூறிக்கொள்ளும் ஒருவர் பரப்பு ஒன்று 80 லட்சம் ரூபாய்படி காணிகளை விற்பனை செய்வதற்கு முயற்சிக்கிறார் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்தத்தகவல்கள் எல்லாம் பிரதேச சபைக்குத் தெரிந்திருந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்படுகின்றது. பிரதேச சபையிடம் கேட்டால், அங்கிருக்கும் காணிகள் தமக்குரியவை என்று 5 பேர் உரிமை கோரியிருக்கிறார்கள். அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்டிருக்கின்றோம். அவை இன்னும் கையளிக்கப்படவில்லை. இந்த நிலையில் அந்தக் காணிகள் யாருக்குரியவை என்று உறுதிப்படுத்த முடியாது. அதற்கிடையில் அங்கிருக்கும் மக்களை ஏமாற்றி காணிகளைச் சிலர் விற்கிறார்கள் என்று எமக்கும் தகவல் கிடைத்திருக்கிறது. மக்கள்தான் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும் என்கிறார்கள்.

காணி மோசடியில் ஈடுபடுபவர்கள் மீது தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் மற்றொரு புறத்தில் மோசடிகளும் தீவிரமாகிக்கொண்டேதான் இருக்கின்றன. சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருந்தாலும் திட்டம் போட்டுத் திருடும் கூட்டம் திருடிக்கொண்டேதான் இருக்கும் போல....

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## தமிழுரைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் காசாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல் தொடர்பாக இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக இதே நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் ஒரு போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் பலஸ்தீன மக்களுடைய பிரச்சினை பேச்சு ஊடாக தீர்க்கப்படவேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டது.

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களோடு ஐ.நா.வுடைய செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் ஒன்று எழுதப்பட்டது. அந்தக் கடிதத்திலும் இங்கு நடைபெற்ற விவாதத்திலும் மிகத் தெளிவாக காசாவில் நடைபெறுவது பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை என்ற விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அங்கு நடைபெறுவது இனப்படுகொலை என்பதை நியாயப்படுத்துவதற்குரிய பல அம்சங்கள் பட்டியலிடப்பட்டிருந்தன. அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கையில் வடக்கு கிழக்கில் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தவையாகும்.

இங்கு இனப்படுகொலையை செய்வித்த கருவி இந்த முப்படைகளும் பொலிசும் ஆகும். இதனைப் பற்றித் தான் இன்று விவாதிக்கின்றோம். அந்த இனப்படுகொலை செய்தவர்கள் இன்று வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 1:14 என்றும் வன்னியில் 1:4 ஆக, மிகவும் ஒரு நெருக்கடியைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஆயதப்படைகளின் பிரசன்னம் இருக்கக்கூடிய நிலையில், எங்களைக் கொலை செய்தவர்களே எங்களுக்கு அருகில் இருப்பதை எம்மால் அனுமதிக்க முடியாதுள்ளது.

ஆகவேதான் - இந்த இனப்படுகொலை தொடர்பாக முழுமையான பொறுப்புக்கூறல் நடைபெற்று, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுகின்ற வரைக்கும் இராணுவத்தை வடக்கு கிழக்கில் இருந்து அகற்ற வேண்டும் என்ற விடயத்தை, அரச தரப்பில் ஒட்டுண்ணிகளாக இருக்கக்கூடிய தமிழ் உறுப்பினர்களைத் தவிர்ந்த, மற்றய அனைத்து தரப்பினரும் கோரிக்கையாக முன்வைத்து வருகின்றனர்.

இதிலுள்ள யாதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் - போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பின்னரும் - போர் இல்லாத சூழலில் தொடர்ந்தும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது என்றால் அதைப்பற்றியும் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இன்று இலங்கை வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற சூழலிலே - மொத்த வரவுசெலவுத் திட்டத்தில் 11 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகின்றது. அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்புக்கு 3.6 வீதமுமாக 14.6 வீதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படுகின்றது. சுகாதாரத்துக்கு 10.6 வீதம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்விக்கு 6.1 வீதம்.

வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியையும் அதிகரிக்க வேண்டும். உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிப்பதற்குரிய மிகு முக்கியமானது கைத்தொழில், விவசாயம், மீன்பிடி என்பவையாகும். கைத்தொழிலுக்கு 0.2 வீதமும். விவசாயத்துக்கு 2.6 வீதமும், மீன்பிடிக்கு 0.18 வீதமும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு தீவு. தீவை சுற்றிவர மீன்பிடி செய்யக்கூடிய நிலையிருந்தும் கூட, இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவருவதற்கு 0.18 வீதம் மட்டுமே அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு தூரம் நெருக்கடிகள் இருக்கும்போது பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்படுவதற்கு காரணம் என்ன? யுத்தம் இன்று இல்லை. இங்கிருக்கக்கூடிய எவரும் நாட்டைப் பிரிப்பதற்கு கோரவுமில்லை, கோரவும் முடியாது. அப்படியானால் என்ன காரணம்?

காரணமென்னவெனில் - நீங்கள் தமிழ் மக்களுடைய தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கத் தயாரில்லை என்றால் - தொடர்ந்தும் தமிழ் மக்களது உரிமைகளைப் பறித்து வைத்திருக்கப் போகிறீர்களாக இருந்தால் - தமிழ் மக்கள் கொந்தளிப்பார்கள் என்ற பயத்திலே அந்த மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கவேண்டிய தேவை உங்களுக்குஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே போர் முடிந்து 15 வருடங்களுக்குப் பிறகும் நீங்கள் இந்த செயற்பாட்டை தொடர்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல் இந்த மக்களை எவ்வளவுக்கு நசுக்க முடியுமோ, அவர்களை நசுக்கி, இந்த மக்கள் இந்த தீவை விட்டு வெளியேறுகின்ற நிலையை ஏற்படுத்துவதற்கும்தான் நீங்கள் சிந்திக்கிறீர்கள்.

தமிழ் மக்களின் பொருளாதாரம் 30 வருடங்களுக்கு மேல் பின் தங்கிய நிலையில் இருக்கின்ற நிலையிலும், அந்த மக்களுடைய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு போர் முடிந்து 15 வருடங்களாகியும் நீங்கள் எதுவுமே செய்யவில்லை. எதுவுமே செய்யாதது மட்டுமல்லாமல், தமிழ் மக்களை மோசமான நிலமைக்குத் தள்ளி அவர்கள் உங்களைக் கெஞ்சுகின்ற நிலைமையை உருவாக்கி, அந்த மக்கள் உரிமைகளைப் பற்றி சிந்திக்காமல் இருப்பதற்காக அவர்களை வறுமையாளர்களாக உருவாக்கி - இராணுவமயமாக்கலுக்குள் உள்வாங்கி, தமிழ்மக்களை முடீமையாக அடிமைகளாக்கி வைத்திருக்கின்ற நிலையையே உருவாக்க முயல்கிறீர்கள்.

இன்று வேலைவாய்ப்புக்கள் இல்லை. மக்கள் சீவிப்பதற்கு வழியில்லாத நிலையை ஏற்படுத்தி, இராணுவத்தின் மூலமாக கொடுப்பனவுகளை வழங்கி உள்வாங்கப்படுகிறார்கள்.

உதாரணமாக - இன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சி.எஸ்.டி. தரப்பு முப்பதாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குகின்றது. ஆனால் கல்வியமைச்சுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறாயிரம் மட்டுமே வழங்கப்படுகின்றது. இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியில் முப்பதாயிரத்தை மக்கள் விரும்புவார்களா? அல்லது ஆறாயிரத்தை மக்கள் விரும்புவார்களா?

நீங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவுதூரம் பணம் ஒதுக்குவதே அந்த மக்களை இந்தப் பாதுகாப்பு அமைச்சுக்குள் உள்வாங்கி, அவர்களை உங்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்தி, அடிமைகளாக்கி, அவர்களை உரிமைசார் பயணங்களில் ஈடுபடமுடியாதவாறு ஆக்கி, உங்களது எடுபிடிகளாகப் பாவிப்பதற்கு திட்டமிட்டு செயற்படுகிறீகள். அதேநேரம் - இந்த மக்கள் இலங்கைத்தீவிலிருந்து வெளியேறக் கூடிய நிலையை இன்னொரு வகையில் உருவாக்குகிறீகள்.

கடற்படையைஎடுத்துக்கொண்டால் - வடக்கு கிழக்கில் இரண்டு மூன்று கிலோமீற்றர்களுக்கு ஒரு கடற்படை முகாம் இருக்கிறது. ஆனால் - இவ்வளவு பாரிய இருப்பை கடற்படை வைத்திருந்தும் கூட வெளிநாட்டிலிருந்து வடக்கு கிழக்கு கடற்பரப்புக்குள் நுழைந்து, ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வந்து கடற்தொழில் செய்து, இங்குள்ள தமிழர்களின் சொத்துக்களை அழித்துவிட்டு செல்வதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள்.

ஆயிரக்கணக்கில் அவர்கள் வந்து அழிவுகளைச் செய்து கொண்டிருக்கின்ற நிலையில் - மாதத்தில் ஐந்து படகுகளை மட்டும் கடமைக்காக பிடித்து விட்டு பின்னர் விட்டுவிடுகிறீர்கள். இது திட்டமிட்டே நடைபெறுகிறது. இந்த விடயம் தொடர்பாக யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாங்கள் கேட்டிருந்தோம். அந்த ஒருங்கிணைப்பு குழு தலைவர் இலங்கையின் மீன்பிடி அமைச்சர்.

அங்கு கடற்படையின் பொறுப்பதிகாரியும் வந்திருந்தார். இந்த நிலைமையைக் கேட்டபோது - கடற்படைக்கு அவர்களுக்கு கிட்டப் போய் பிடிப்பதற்கு பயம். அந்தளவுக்கு எண்ணிக்கையில் கூடிய ஆட்களாக வெளியாட்கள் வருகிறார்கள் என்று மீன்பிடி அமைச்சர் கடற்படை அதிகாரியின் கருத்தாககூறுகிறார். இது நம்பக்கூடிய கதையா?

உண்மையில் பயமென்றால் நீங்கள் ஏன் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து, மூன்று கிலோ மீற்றருக்கு ஒரு கடற்படை முகாம் அமைத்து இருக்கிறீர்கள்? அப்படியென்றால் இங்கு கடற்படை இருக்கத் தேவையே இல்லையே. என்னதேவைக்காக வடக்குகிழக்கில் வைத்திருக்கிறீர்கள்;?

இந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்க முடியாமல் முழுமையாக கடற்கரைகளை கடற்படையினர் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலையிலும் பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால், எதற்காக கடற்படையினரை இங்கு வைத்திருக்கிறீர்கள்?

இதற்கு காரணம் - ஒரு பக்கம் தமிழ் மக்களின் காணிகளைப் பறித்து, இருக்க முடியாத சூழலை உருவாக்கி, வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு அவர்களுக்கு நிலைமையை ஏற்படுத்தி, தமது தொழிலையும், காணிகளையும் விட்டு வெளியிடங்களுக்கு போவதற்குரிய நிலையை திட்டமிட்டு உருவாக்குவதும்,

அதேநேரம் - வெளியிடங்களில் இருந்து அத்துமீறி வருபவர்களையும் அனுப்பி, தொடர்ந்தும் தொழில் செய்ய முயற்சிக்கின்ற தமிழ் மக்களி;ன் சொத்துக்களையும், உபகரணங்களையும் அழித்து அவர்கள் கடற்தொழில்; செய்யமுடியாத நிலைமையையும் ஏற்படுத்துவது தான் உங்களின் நோக்கமாக இருக்கிறது.

இதேபோல் - வர்த்தகத்தை எடுத்துக் கொண்டாலும் - சிகை அலங்கரிப்பு நிலையங்கள், மரக்கறி விற்பனைகள், உணவு விடுதிகள், வியாபாராம் அனைத்திலும் போட்டியிடுகிறீர்கள். ஒரு அரசு தனது கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய முப்படைகளுக்கும் பாரிய நிதி ஒதுக்கி அந்த நிதியூடாக செயற்படுத்துகின்ற தன்மையோடு பொதுமக்களால் போட்டியிட முடியுமா? பொதுமக்களால் அது முடியாது.

இன்று கட்டுமானப் பணிகளைக் கூட அரசு தரப்பு, இராணுவத்திடம் கொடுக்கும் நிலையே இருக்கிறது. அப்படியானால் - பொதுமக்களின் நிலை என்ன? ஆகவே சகல வகைகளிலும் மக்களை நசுக்கி - தங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்க முடியாத நிலைமைகளை உருவாக்கி - அந்த மக்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றுவது தான் உங்களின் உண்மையான நோக்கமாக இருக்கிறது.

போனவருடமும் நான் குறிப்பிட்ட அதே விடயத்தையே நான் இம்முறையும் குறிப்பிடுகின்றேன். இது உங்களை கோபப்படுத்துவதற்குரிய விடயமல்ல. ஆனால் இந்தக் கோணத்தில் மக்கள் இதனைப்பார்த்து விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனை கூறுகின்றேன்.

இலங்கை அரசின் ஒட்டு மொத்த கட்டுமானங்களில், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக தமிழ் மக்கள் தனத்துவமான வெறுப்பினை வைத்திருக்கிறார்கள். அதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அமைச்சினுடைய செயற்பாடுகளால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களின் கௌரவத்தைப் பறித்து, அவர்களின் அடையாளங்களை அழித்து செயற்படுகின்ற உங்களின் இனவாத செயற்பாடுகள் தொடர்ந்தும் இருக்கும் நிலையில், தமிழ் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக இருக்கக்கூடிய ஒரேவழி, முழுமையான சர்வதேச குற்றவியல் விசாரணையேயாகும்.

சர்வதேச குற்றவியல் விசாரணையை நடாத்துவதன் ஊடாகவும் குற்றவாளிகளை இனங்கண்டு தண்டனை வழங்குவதூடாகவும் மட்டுமே அது அமையும். இதனாலேயே தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராகவே நாம் வாக்களித்து வருகின்றோம். தொடர்ந்தும் எமது தமிழ் மக்களின் நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் ஒரு சர்வதேச பொறுப்புக்கூறலை நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்திக்கொண்டே இருப்போம் என்றார்.

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது இறப்பு இயற்கையாக நிகழ்ந்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்று மருத்துவ உடற்கூறாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வடக்கு மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இளைஞனின் இறுதிக்கிரியைகள் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கெடுப்புடன் நடந்தன. உயிரிழந்த இளைஞனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் பல தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், வழக்குத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தா, "இளைஞனின் இறப்பு கொலை என்பது தெட்டத் தெளிவானது. இந்த வழக்கு நடவடிக்கையில் அனைத்துச் சட்டத்தரணிகளும் இணைந்து கொள்ள வேண்டும். பிரதானமாக குற்றவியல் வழக்குகளில் அனுபவம் வாய்ந்தவர்களும் இணைந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

நாளைய தினம் வழக்கு நடைபெறவிருக்கின்றது. அன்று அவரது உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தொடர்ச்சியான சித்திரவதையால்தான் இளைஞர் மரணமடைந்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை பொலிஸ் தரப்பில் விரைவாக எடுக்கவேண்டும். அனைத்து விடயங்களும் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். இந்தக் கொலைக்குக் காரணமான அனைவரும் நீதிமன்றில் உடனடியாக முற்படுத்தப்படவேண்டும்.

இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்த நோக்கத்துடன் நீதிமன்றில் விண்ணப்பங்களை முன்வைப்போம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் இந்த நடவடிக்கையில் இணைந்துகொள்ள வேண்டும். பொலிஸ் காவல் இறப்புக்கள் என்பது சட்ட ஆட்சிக்கே விடுக்கப்பட்ட பகிரங்க சவால் அதை நாம் எதிர்கொள்வோம்" என்றார் சிறீகாந்தா.

## நெல்லியடியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



அஞ்சலி செலுத்தும் நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவீரர் நினைவு மாதிரி மண்டபத்தில் மக்கள் சென்று மலர்தூபி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

குறித்த மண்டபத்தில் மாவீரர் வார இறுதி நாளான நவம்பர் 27 வரை அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்கள் மீதான விவாதம் இடம்பெற்றது.

விவாத முடிவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீது வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் பாதுகாப்பு அமைசுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 68 மேலதிக வாக்குகளினால் ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்திருந்த நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன், ஆகியோர் எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்துக் கொள்ள வில்லை.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்றம் சபா மண்டபத்தினுள் அலைபேசி பயன்பாட்டை தடுங்கள்

## நீதியமைச்சர் விஜயதாஸ கோரிக்கை



மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுவதை விடுத்து ஆளும் மற்றும் எதிர்தரப்பினருக்கு இடையிலான மோதல் தொடர்பில் ஆராயவே நாடாளுமன்றத்தில் அதிககவனம்செலுத்தப்படுகிறது. இந்நிலைக்கு பிரதமர், சபாநாயகர் உட்பட ஒட்டுமொத்த உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். சபைநடவடிக்கைகளின்போது தொலைபேசி பாவிப்பதை முதலில் தடை செய்யுங்கள். நிலையியற் கட்டளையைத் திருத்தி கடுமையான தீர்மானங்களை எடுங்கள் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளால் ஒட்டுமொத்த மக்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தை மேன்மை பொருந்தியதாகவும், வெஸ்மினிஸ்டர் முறைமையுடையது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் இன்று நாடாளுமன்றத்தில் கொள்கைகளுக்கு முரணான செயற்பாடுகள் மாத்திரமே இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதை விடுத்து, ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையிலான மோதல் பற்றி காலையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. இதற்கு அதிக காலம் செலவழிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் தான் மக்கள் நாடாளுமன்றத்தை வெறுத்து, விமர்சித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதற்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

நாடாளுமன்றத்தின் இன்றைய நிலைக்குப் பிரதமர் உட்பட சபாநாயகரும் பொறுப்புக் கூற வேண்டும். நாடாளுமன்ற விவாதத்தை மக்கள் விரும்பிப் பார்த்த காலமும் உண்டு. ஆனால் இன்று நாடாளுமன்றம் தொடர்பான விமர்சனங்கள் மாத்திரமே முன்வைக்கப்படுகின்றன. நாடாளுமன்றத்தைப் பார்வையிட வரும் மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்கிறார்கள் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாடாளுமன்றவிவாதத்தின் போது தொலைபேசியில் உரையாடுவதற்கு முதலில் தடை விதிக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க உரியநடவடிக்கைஎடுக்காவிட்டால் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலமும் குறைவடையும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் மாற்றம் ஏற்படுத்தியாவது கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# அதிவேக நெடுஞ்சாலைகளை என்றைக்கும் விற்கமாட்டோம்

## பந்துல திட்டவட்டம்

அதிவேக நெடுஞ்சாலைகளை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தீர்மானிக்கப்படவில்லை. அதேவேளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பணிபுரியும் எந்த ஓர் ஊழியரினதும் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படாது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சின் அறிவித்தல் ஒன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டமொன்று தொடர்பில் அறிவித்து விட்டு அதற்கிணங்க அவர்கள் பணி பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

பிரவேசப் பத்திரங்களை வழங்கும் உபகரணங்களை அவர்கள் எடுத்துச்சென்றுள்ளார்கள்.

வேலை நிறுத்தப் போராட்டம் செய்வது அவர்களது உரிமை. எனினும் சுகவீன விடுமுறையை எடுத்துக் கொண்டு பலவந்தமாக அனைத்து ஊழியர்களையும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு இழுத்துள்ளார்கள்.

அது தவறு. அவர்கள் எடுத்துச் சென்றிருப்பது அரசாங்கத்தின் சொத்து என்பதால் அதனை மீண்டும் கையளிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் அதிகவேகவீதியைப் பயன்படுத்துபவர்களுக்கு பிரவேசப் பத்திரங்களை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அதனை வாய்ப்பாக வைத்து மோட்டார் சைக்கிள்கள் இந்த நெடுஞ்சாலைகளில் பயணிக்குமானால் பெரும் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. அத்தகைய நிலையைத் தடுக்கும் வகையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரைக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் அரசாங்கத்திற்கு இழக்கப்படும் வருமானத்தைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

சிக்கல்கள் ஏற்படலாம் என்பதை எதிர்பார்த்து அத்துருகிரிய மற்றும் கொட்டாவ பொலிஸில் இந்த நிலைமை தொடர்பில் நாம் முறைப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பிரவேசப் பத்திரங்களை வழங்கும் இயந்திரங்கள் இல்லாமல் பிரவேசப் பத்திரங்களை வழங்குவது தொடர்பான முறைமை ஒன்றை நாம் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிமுகப் படுத்தியுள்ளோம்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எந்த ஓர் ஊழியரினதும் தொழிலுக்கு பங்கம் ஏற்படாது என்பதை நாம் உறுதியாகத் தெரிவிக்கின்றோம். அதனை நாம் உறுதியாகத் தெரிவித்தும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் நாம் எதுவும் செய்ய முடியாது. அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எனினும் அதன் நிர்வாகத்தை எமது அமைச்சே முன்னெடுக்கின்றது. அந்த வகையில் எந்த ஊழியர்களின் தொழிலும் இழக்கப்பட மாட்டாது. - என்றார். (05)

# நீதிமன்றை தம் ஆடைக்குள் வைத்துக்கொள்ள முயற்சி

## மைத்திரிபால சிறிசேன வேதனை



பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதியரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விவாதிக்க கூடாது, நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வழக்குகளை மேற்கோள் காட்டி விவாதிக்கக் கூடாது என நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது சபையில் நீதிபதிகளின் பெயர் குறிப்பிடப்படுகிறது. விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. நீதிமன்றத்தை தமது ஆடைபைக்குள் வைத்துக் கொள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புஇடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

ஜனாதிபதியாக நான் பதவி வகித்த போது வனஜீவராசிகள் பாதுகாப்பிற்கும், வனவள பாதுகாப்பிற்கும் பிரத்தியேக நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். எனது ஆட்சிகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டன.

புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தி இரத்தினபுரி, பல்லேகல உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் மாணிக்கக்கல் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் நேரடியாக மாசடைகின்றன. இயந்திரங்கள் ஊடாக மாணிக்கக்கல் அகழ்வு பணிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

சமூகக் கட்டமைப்பில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தற்போது சாதாரணமாகி விட்டது. பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்க முடியும். ஆகவே போதைப்பொருள் ஒழிப்புக்கு கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

நாடாளுமன்ற உரையில் நீதியரசர்களின் பெயர் குறிப்பிட்டு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றமை தற்போது வழமையாகி விட்டது. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் பிரதமநீதியரசர், உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதியரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விவாதிக்கக்கூடாது. நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வழக்குகளை மேற்கோள்காட்டி விவாதிக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது சபையில் நீதிபதிகளின் பெயர் குறிப்பிடப்படுகிறது. நீதிமன்றத்தை தமது ஆடைபைக்குள் வைத்துக் கொள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். - என்றார். (05)

# 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணம் கைநழுவிப் போனமை தொடர்பாக விசாரிக்குக

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை தென்னாபிரிக்காவிற்கு மாற்ற காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் சர்வதேச கிரிக்கெட் பேரவையிடமும் வினவ வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையே அதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்னர் எமது நாட்டில் நடத்தப்பட்ட சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 5 கிரிக்கெட் போட்டி தொடர்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அந்த 5 போட்டிகளும் இடைக்கால நிர்வாகத்தின் கீழே இடம்பெற்றிருக்கின்றன.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை, 2002 சாம்பியன்ஸ் கோப்பை, 2006 ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை, 2011 சி.டபிள்யூ.சி மற்றும் 2012 ஆம் ஆண்டு இருபதுக்கு 20 உலகக் கோப்பை போன்றன இடைக்காலக் குழுக்களின் கீழே நடத்தப்பட்டுள்ளன. அதனால் இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர், ஜனாதிபதி விசாரணை நடத்த வேண்டும். சர்வதேச கிரிக்கெட் பேரவையிடமும் கேள்வி எழுப்ப வேண்டும்.

அத்துடன் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை தென்னாபிரிக்காவிற்கு மாற்ற இலங்கை கிரிக்கெட் சபைக்கு எவ்வாறு தூண்ட முடியும். அதனால் கிரிக்கெட் சபையின் தலைவர் உட்பட அதிகாரிகளின் இந்த தேசத்துரோக செயலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக ஜனாதிபதியை அறிவுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

(05)

# இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை செயலாளரிடம் மன்னிப்புக் கோரினேன்

## ஜனாதிபதி ரணில் பகிரங்கம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய்ஷா குறித்து இலங்கையில் வெளியான கருத்துக்களுக்காக அவரிடம் தான் மன்னிப்புக்கோரினார் என்று ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகத்திற்கான பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் இலங்கை கிரிக்கெட்டை நிர்வாகம் செய்கின்றார் எனத் தெரிவித்துள்ள கருத்துக்கள் கிரிக்கெட் உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை ஜனாதிபதியே இந்தக் கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோருமளவிற்கு இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெஸ்;ட்போர்ஸ்டின்பல்கிசர்மாவிற்கு வழங்கிய விசேட பேட்டியில் இலங்கை ஜனாதிபதி ஷாவுடன் இது குறித்து பேச்சுகளை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஷா இலங்கைகிரிக்கெட்டை நிர்வகிக்கவில்லை. அவர்கள் ஷா இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு ஆதரவளிக்கின்றார் எனக் கருதுகின்றனர். நான் ஷாவுடன் பேசினேன். வேதனையை வெளியிட்டேன். அவருடைய பெயர் தேவையில்லாமல் இழுக்கப்பட்டமைக்காக மன்னிப்பு கோரினேன் என ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நேரமும் பணமும் விரயம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் புதைத்து வைக்கப்பட்டவை என்று கருதப்படும் ஆயுதங்களைத் தேடி முள்ளிவாய்க்காலில் நேற்று அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது. இன்றும் அந்தப் பணி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ள கடற்கரை பகுதி ஒன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாகக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் காவல்துறையினரால் நீதிமன்றத்தில் நகர்த்துப் பத்திரம் மூலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை தொடங்கிய இந்த அகழ்வுப் பணி பிற்பகல் 3 மணி வரையும் இடம்பெற்றது. அத்துடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பணிகள் இன்று மீண்டும் தொடரும் என்று தெரிகின்றது.

முள்ளிவாய்க்கால் பகுதியிலும் முல்லைத்தீவின் பல இடங்களிலும் இவ்வாறு புலிகளின் ஆயுதங்களையும் தங்கத்தையும்தேடிகாவல்துறையினர்நீதிமன்றஅனுமதியுடன் தோண்டுவது இதுமுதற்றடவையல்ல. இதற்குமுன்னரும்பல தடவைகளில்இவ்வாறுதோண்டியிருக்கிறார்கள். அத்தகைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காவல்துறையினருக்குக் கிடைத்த தகவல்களின்படி அந்த இடங்களில் ஆயுதங்களோ, வெடிப்பொருட்களோ, பணமோ, தங்கமோ கண்டெடுக்கப்படவில்லை. போர்முடிந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தாயகப் பரப்பில் தனது செயற்பாட்டை இழந்து 15 ஆண்டுகள் நெருங்கிவிட்ட பின்னரும்கூட காவல்துறையினர் இந்தத் தேடுதல் வேட்டையைக் கைவிடுவதாக இல்லை.

அப்படி அவர்கள் நடத்தும் தேடுதல்களில் பொருட்கள் கிடைத்தால் அவர்களின் இந்தப் பணி வரவேற்கத்தக்கது. ஆனால், காவல்துறையினர் கூறும் இரகசியத் தகவல்களின்படி எந்தப் பொருளும் மீட்கப்படாத நிலையில் தொடர்ந்தும் இத்தகைய தோண்டும் பணிகளை முன்னெடுப்பது நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கும் செயலாகவே அமைகின்றது. ஒரு இடத்தில் தோண்டி அங்கு ஏதாவது பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கின்றனவா என்று சோதிப்பதற்கு நீதிமன்றம் உள்ளிட்ட பல அரச திணைக்களங்களின் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு இடத்தில் தோண்டும்போ–து அங்கு, நீதிவான், நீதிமன்றப் பணியாளர்கள், காவல்துறையினர், சிறப்பு அதிரடிப் படையினர், தரைப் படையினர், கிராம அலுவலர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதாரப் பிரிவினர், தடயவியல்பிரிவினர்என்று பல அரச துறையினரும்தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிடவேண்டியவர்களாக இருக்கின்றனர். கடைசியில் அங்கிருந்து எதுவும் கிடைக்காதபோது இவர்கள் அனைவரது நேரமும் பணமும் வீணடிக்கப்படுகின்றது.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் அவசியமானவையாகக் காவல்துறையினர்எண்ணுகின்றபோதும்அரசவளங்களை வீணடிப்பதற்கு முன்னதாக, சந்தேகப்படும் இடத்தில் உண்மையில் நிலத்துக்கடியில் ஏதாவது பொருட்கள் புதையுண்டு இருக்கின்றனவா என்று அறிவதற்கான அறிவியல், தொழில்நுட்ப முறைகளைக் காவல்துறையினர் பயன்படுத்துவதே சிறப்பானது.

நிலத்துக்கடியில் இரும்பு மற்றும் புதைபொருட்கள் இருந்தால் அவற்றை நில மட்டத்திற்கு மேலிருந்தே அறிந்துகொள்ளத்தக்க தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி எந்தளவு தூரம் வியாபித்துள்ளது என்பதை அறிய அந்தத் தொழில்நுட்பத்தையே பயன்படுத்தப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொழில்நுட்பத்தை புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை தேடுவதற்கும் பயன்படுத்த முடியும்.

அப்படிச் செய்யும்போது அரச வளங்களும் மனித வளங்களும் வீணடிக்கப்படுவது தடுக்கப்படும். நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் முடிவதற்கு நீண்ட காலங்கள் எடுத்துவரும் நிலையில், அவற்றின் நேரத்தை இதுபோன்று காவல்துறையினர் வீணடிப்பது வழக்கு விசாரணைகளில் மேலும் தாமதங்களை ஏற்படுத்தக்கூடும். அதனால் கடந்த 15 வருடங்களாக நடந்துவரும் இத்தகைய தேடுதல்களுக்கு முன்னதாக நிலத்துக்கடியில் ஏதாவது புதைந்திருக்கின்றனவா என்பதை தொழில்நுட்ப ரீதியில் உறுதிப்படுத்திக்கொண்டு காரியத்தில் இறங்குவத தொடர்பில் காவல்துறையினர் தீவிரமாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# இது என்ன, 'இந்து தாயகம்'?

**என். சத்திய மூர்த்தி**

அண்மையில், வடக்கில், இந்து சிவசேனா என்ற அமைப்பு ஒரு கோரிக்கையை முன்வைத்தது. அது சில பத்திரிகைகளிலும் வந்தது. என்றாலும், அது குறித்து எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையும் கருத்துத் தெரிவிக்கவில்லை. இதுவே தமிழ் சமூக தலைமைகளுக்கும் சிவில் சமூத்திற்கும் பொருந்தும். ஏன், ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்று ஆண்டவனுக்கும் அரசியலுக்கும் இடையே இணைப்பு பாலமாக செயல்படுவதாக நினைத்துக் கொள்ளும் சில இந்து மத குருமார்களும் பரப்புரைகாரர்களும் கூட அதனைக்கண்டுகொள்ளவில்லை.

அந்த விமர்சகர்களுககு எதிராக கருத்துதெரிவித்து, அனாவசியமாக அவர்களுக்கு செலவில்லாமல் விளம்பரம் செய்து கொடுப்பதா? என்பது தமிழ் தலைமைகளின் எண்ணமாக இருக்கலாம். என்றாலும், அடிக்கடி இது போன்ற கருத்துக்கள் தமிழ் மக்களிடையே பரப்பப்படுவதாக இருந்தால், அதன் பிற்கால விளைவுகள் என்னவாக இருக்கலாம் என்பது குறித்து அவர்கள் யாருமே யோசித்ததாகத் தெரியவில்லை.

விடயம் இதுதான். வடக்கு -கிழக்கு இணைப்பை முன்னெடுத்து, அதனை 'இந்து தாயகம்' என்று பிரகடனப்படுத்தவேண்டும் என்பதே சிவசேனாவின் கோரிக்கை, விருப்பம் அல்லது எதிர்பார்ப்பு. கிடந்ததெல்லாம் கிடக்கட்டும் கிழவியை தூக்கி மணையில் வை என்பது போன்ற எதிர்பார்ப்பு இது.

**சுமுகமான உறவு**

இதற்கான காரணங்கள் பல. ஒன்று, வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்துக்கள்மட்டுமேவாழவில்லை. நாட்டில், குறிப்பாக தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலோர் இந்துக்கள் என்பது உண்மை. ஆனால், இங்கு கிறிஸ்தவர்களும் முஸ்லீம்மக்களும்கூடகணிசமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.

இவர்களில் கிறிஸ்தவர்கள், இனப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு தமிழர் சார்ந்த விடயங்களில், மதப் பிரிவுகளைப் பார்க்காமல் ஒரே அணியாக நின்று வந்தார்கள். இப்பொழுதும் அவ்வாறே இருக்கிறார்கள். இனியும் அவ்வாறே இருப்பார்கள் என்று நம்ப இடமிருக்கிறது. ஆனால், தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் அவ்வாறல்ல. விடுதலை புலிகள் அமைப்பினால் பந்தாடப் பட்டார்கள். படுகொலை செய்யப் பட்டார்கள். என்றாலும் அவர்கள் தமிழ் மக்கள் என்று அறியப்படும் பிற இனத்தவர்களை எதிரிகளாகக் கருதவில்லை.

தற்போது, தமிழர்கள் விடுதலை புலிகள் அமைப்பின் மாவீரர் தினம் குறித்து பேசுகிறார்கள். அதே சமயம், கிழக்கில் அக்கரைபற்று முஸ்லீம் மக்களும், அந்த அமைப்பால் அந்த ஊர் மசூதியில் 1990ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லீம் மக்களின் நினைவு நாளை அனுஷ்டிக்கிறார்கள்.

இனப்போர் முடிந்த கடந்த ஆண்டுகளில் பல்வேறு காலகட்டத்தில், தமிழர் தரப்பும் முஸ்லீம் தரப்பினரும் கலந்து பேசியிருக்கிறார்கள். குறிப்பாக கிழக்கு மாகாண தேர்தல்களில் கூட்டணிஅமைத்துபோட்டியிடுவது குறித்துப் பேசி இருக்கிறார்கள்.

அந்தவிதத்தில்சம்மந்தன், ரவுப் ஹக்கீம் ஆகிய இருவரிடையே சுமுகமான உறவுகள் இருப்பதாகவே கருதவேண்டும். கடந்த ஆண்டு, இந்தியப் பிரதமருக்கு தமிழர் கட்சிகள் கடிதம் எழுதுவதில் தோன்றிய பிரச்சினை குறித்த பஞ்சாயத்திற்கு ரவுப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோர் அழைக்கப்பட்டனர்.

**அண்ணன்-தம்பி உறவு**

இந்தமூன்றுஇனத்தவர்களுமே இன்றளவும், அண்ணன்-தம்பியாக ஒட்டி உறவாடுகிறார்கள். இது தவிர கிழக்கு மாகாணத்திலும், தலைநகர் கொழும்பிலும் வாழும் மலையகத் தமிழர்களும் ஒரே மொழியை தானே பேசுகிறார்கள்.

மொழியை முன்னிறுத்தி, அனைத்து மக்களையும் ஒன்றிணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். தந்தை செல்வாவிற்கு பின், அன்றும் சரி, இன்றும் சரி, யாரும் அத்தகைய முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. அவர் தான், மலையக தமிழ் மக்கள் நாடற்ற மக்களாக பிரகடனப் படுத்தபட்டபோது, அவர்களுடன் தோள் கொடுத்துப் போராடத் தயாரானார். ஆனால் மலையக தமிழர்களின் பெருந்தலைவரான சௌமியமூர்த்திதொண்டமானின் நிலைபாடு வேறாக இருந்தது.

பெரியவர் தொண்டமானின் கூற்றில் உண்மை இருந்தது. அவர் சுட்டிக்காட்டியது போல, வடக்கு- கிழக்கில் வாழும் இலங்கை தமிழர்கள் அன்றும் சரி, இன்றும்சரி, உரிமைகளுக்காக போராடுகிறார்கள். மலையக தமிழர்களோ, அனைத்து காலகட்டத்திலும்வயிற்றிக்காகவே போராடும் வறிய நிலையே இன்னமும் உள்ளது.

**அடுத்தகட்ட நடவடிக்கை**

இந்த பின்னணியில், மொழியின்பெயரால், அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் இணைக்கவேண்டும் என்பது ஒரு விடயம். வரவேற்கப்பட வேண்டியதும் கூட. இன்னும் சொல்லப்போனால், இனப்போர் முடிவுற்று தசாப்தம் கடந்த தற்போதைய காலகட்டத்தில் யாழ்பாண அறிவுஜீவிகள்கூட தற்போது தங்களது நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்பலாம்.

மொழியின் பெயரால் அவர்கள் அனைவரையும் இணைக்க முடியாவிட்டாலும், மதத்தின் பெயரால் அவர்களை யாரும் பிரிக்க முயலக்கூடாது. அவ்வாறான முயற்சிகளை தட்டி கேட்காமல் இருப்பதே அவர்களில் பலருக்கும் தைரியத்தையும் நம்பிக்கையையும்கொடுத்துவிடும். அதன் பின்விளைவுகள் தவறானதாக இருக்கும். இப்போது இல்லை என்றாலும் பிற்காலத்தில், பயங்கரமாகக்கூட இருக்கலாம்.

காரணம், தற்போதைய சிவசேனாவின்கோரிக்கை, இதற்கு முந்தைய சிறியதும்பெரியதுமான முன்னெடுப்புகளின்பின்னணியில் தோன்றியுள்ளது. அதாவது, இது அவர்களது அடுத்தகட்ட நடவடிக்கை என்றே கொள்ளப்படவேண்டும்.

**குஷ்பு மேட்டர்**

இது இப்படியென்றால், யாழ்பாணம்வரவிருக்கும்தமிழ்த் திரைப்பட நடிகை குஷ்புவிற்கு எதிராகபரப்பப்படும்எச்சரிக்கைகள், இதற்கு நேர் எதிர்மாறானது. தென்னிலங்கையுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தமிழர் பகுதிக்கு வந்தால், அவரை விளக்குமாறால் எமது பெண்கள் அடித்து துரத்துவார்கள் என்று சாரப்படும்படி ஒரு சிலர் அறிக்கை விடுத்துள்ளனர். அதனை பத்திரிகைகளும் பெரிதுபடுத்தி உள்ளன.

குஷ்புவின் அரசியல் நிலைபாடுகளால், குறிப்பாக தமிழ்நாட்டிலேயே அவ்வப்போது எதிர்வினைகளை எதிர்கொண்டு வந்திருக்கிறார். அரசியலில் அது வெல்லாம் சாதாரணம். அவரது அரசியல் அறிக்கைகளையும் மகளிர் உரிமை குறித்த அவரது நிலைபாடுகளையும் வன்மையாகக் கண்டித்த ஆண் -பெண் இருபால் அரசியல் தலைவர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். ஆனால், அவரதுஅரசியல்நிலைபாட்டிற்காக, அவரை பெண் என்றும் பாராமல் கொச்சைபடுத்துவது தான், யாழ்பாண கலாச்சாரம் கற்றுக்கொடுத்த நாகரீகமா?

தங்களது சமூக–அரசியல் கொள்கைகளைஎதிர்த்துவிமர்சனம் செய்பவர்களை அச்சுறுத்துவது, விடுதலை புலிகள் அமைப்பின் செயல்பாடாக அல்லவா இருந்து வந்தது? தற்போது, திடீரென்று அத்தகைய எண்ணவோட்டம் எங்கிருந்து முளைத்தது?

**மொட்டை தலை, முழங்கால்**

இதில் விந்தையான விந்தை ஒன்றுஉள்ளது. குஷ்புவைதாக்கும் முகமாகஅறிக்கைவிட்டபிரகஸ்பதி, விடுதலைபுலிகள்அமைப்புகுறித்த அவரது எண்ணம், அவர் சார்ந்த பாரதியஜனதாகட்சியின்கொள்கை என்று சாரப்படும்படியும் கருத்து தெரிவித்துள்ளார். இதன் மூலம் அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரியவில்லை.

பொதுப்படையாக தீவிரவாதத்தை இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் கண்டித்து வந்துள்ளன. பாரதிய ஜனதா கட்சியும்அவற்றில்ஒன்று. தற்போது ஆட்சியில் இருப்பதால், அந்த கட்சியும் கருத்தும், இந்திய அரசின் தொடர் நிலைபாடும்கூட ஒன்றை ஒன்றுபின்னிப்பிணைந்துள்ளன.

அவ்வாறானால், விடுதலை புலிகள் அமைப்பு ஒரு தீவிரவாத அமைப்பு என்று பாரதிய ஜனதா கட்சியின் நிலையை குஷ்புவிற்கு எதிராகக் கருத்துச் சொன்னவர் ஏற்றுக்கொள்கிறாரா? அது தமிழர்கள் அனைவருக்கும் நெருடலான விடயம் என்றால், தமிழ் அரசியல் தலைமைகள் அனைத்துமே ஏன் இன்னமும் பாரதிய ஜனதா பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் மக்களுக்கு பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான உரிமைகள் அனைத்தையும் பெற்று தரவேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கைவிட்டு வருகிறார்கள்?

அதாவது, அவர்களும் அடிமனதில், விடுதலை புலிகள் அமைப்பின் தீவிரவாதப்போக்கை



விடுதலை புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பு என்று அவர் கூறியதைஎதிர்த்துயாழ்பாணத்தில் குரல் எழுப்பபட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக, குஷ்பு இலங்கை வந்தால், அவர் எதிர்க்கிறார்கள் என்றுதானே அர்த்தம். அதிலும் குறிப்பாக, இலங்கை தமிழ் அரசு கட்சியும் அதில் குறிப்பிடத்தக்க சில தலை

தொடர்ச்சி 5 ம் பக்கம்



# முல்லைத்தீவின் அகிலத்திருநாயகிக்கு நாடாளுமன்றில் வாழ்த்துத் தெரிவிப்பு

அண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற நேஷனல் மாஸ்டர்ஸ் அன்ட் சீனியர் அத்லடிக்ஸ் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய முல்லைத்தீவை சேர்ந்த வீராங்கனை அகிலத் திருநாயகி இரண்டு தங்கப் பதக்கங்களை தனதாக்கி நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

ஆகவே இவருக்கு இந்த உயரிய சபை ஊடாக வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் உதயனி கிரிந்திகொட குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போது மேற்கண்டவாறு வாழ்த்துத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியை சேர்ந்த அகிலத்திருநாயகி (72 வயது) (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) என்பவரே இந்த சாதனையை படைத்து நாட்டுக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.

இந்த வீராங்கனைக்கு வாழ்த்து தெரிவிப்பதுடன், அவருக்கு தேவையான வசதிகளை பொறுப்பான அமைச்சு வழங்க வேண்டும் என்று குறிப்பிடுகிறேன். - என்றார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது தமிழ் பிரதிநிதிகள் எவராலும் இந்த சாதனை பற்றி பேசவில்லை, வாழ்த்து தெரிவிக்கவுமில்லை.

1500 மீற்றர் ஓட்டப்போட்டி மற்றும், 5000 மீற்றர் விரைவு நடை ஆகிய போட்டிகளில் கலந்துகொண்டு இந்த இரண்டு தங்கப் பதக்கங்களை அகிலத்திருநாயகி வென்றுள்ளார்.

72 வயதில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்த இவர் மேலும் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கியுள்ளார். (05)



## இது என்ன, 'இந்து தாயகம்'?



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வர்களும், அன்றும் சரி, இன்றும் சரி, அவ்வாறே கூறி வந்துள்ளனர். தமிழ் மக்களும் அவர்களுக்கு தேர்தல் மூலம் தங்களது தொடர் ஆதரவை அளித்து வந்துள்ளனர்.

தமிழ் அரசு கட்சிக்கு அப்பாலும், முன்பு கடும் போக்கை பின்பற்றி வந்த தமிழ் அரசியல் தலைமைகள் கூட மிதவாதிகளாக மாறி கனகாலம் ஆகிவிட்டது. அதனாலும் கூட, அவர்களுக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ந்து வாக்களித்து வந்துள்ளனர்.

அவ்வாறானால், விடுதலைபுலிகள் இயக்கம் தீவிரவாத இயக்கம் அல்ல என்று சாரப்படி பேசி வருபவர்கள், மிதவாத கட்சிகளுக்கு வாக்களித்த பெரும்பாலான தமிழ் மக்களையுமா, எதிர்த்து விமர்சிக்கிறார்கள், அவர்களுமா, இவர்களுக்கு வேண்டாதவர்கள் ஆகிவிட்டார்கள்?

இதற்கும் அப்பால் சென்று, தமிழர் பகுதிகளில் நடிகை குஷ்பு, பாரதிய ஜனதா கட்சியின் இந்து மதம் சார்ந்த அரசியலை புகுத்தப்பார்க்கிறார் என்றும் குற்றச்சாட்டு உள்ளது. இதுவரை தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் பாரதிய ஜனதா கட்சிக்கும் பிரமதர் மோடிக்கும் ஆதரவாக கருத்து தெரிவித்துள்ள அவர், ஒரு முறைகூட நேரடி இந்துத்வா அரசியல் குறித்து பேசியதே இல்லை.

அந்த விதத்தில், குஷ்பு, இந்து மதத்தவர் அல்லர் என்பதோ, அவர் சுதந்திரத்திற்கு முன்னரான வடமேற்கு இந்தியாவில் பட்டா ணியர் என்று அறியப்படும் பதான் வகுப்பை சார்ந்தவர் என்றோ அவரை திட்டி தீர்ப்பவர்களுக்கு தெரிந்திருக்க வழியில்லை. அந்த விதத்தில் அவர் முஸ்லீம் மதத்தினர்.

அவலை நினைத்துக்து கொண்டு, உரலை இடித்த கதையாக, குஷ்புவை விமர்சிப்பவர்கள், மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் அரசியல் மாற வேண்டும். அதன் இடத்தில், நாகரீக அரசியல் மீண்டும் தலைதூக்க வேண்டும்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உலகளாவிய குழப்பங்களுக்கு மத்தியிலும்கூட இலங்கையின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்து





இந்து சமுத்திரம் எந்தவொரு உலக பலவான்களின் தனிப் பட்ட ஆதிக்கத்துக்கு உள்ளாகாமல் இருப்பதைஉறுதிப்படுத்துவதற்கான பொருளாதார, அரசியல் மற்றும் வெளிநாட்டு தொடர்புகள் உள்ளிட்ட சாத்தியமான கொள்கை அடிப்படையில் விரிவான மூலோபாயத் திட்டமொன்று அவசியமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

அதனால், உலகளாவிய குழப்பங்களுக்கு மத்தியிலும் இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இரத்மலான ஈகல் லேக் சைட் வளாகத்தில் நடைபெற்ற இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் இரண்டாவது பாடநெறிக்கான பட்டமளிப்பு நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு, தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் இரண்டாம் பாடநெறியை வெற்றிகரமாகநிறைவுசெய்தமுப்படையினர் மற்றும் இலங்கை பொலிஸின் 36 சிரேஷ்ட அதிகா ரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பட்டம் வழங்கினார்.

அதனையடுத்து தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தால் வருடாந்தம் வெளியிடப்படும் நூலின் முதற் பிரதி ஜனாதிபதிக்கு வழங்கிவைக்கப்பட்டதோடு, தேசிய பாதுகாப்புகற்கைகள்நிறுவனத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் டீ.ஜீ.எஸ்.செனரத் யாபாவால் ஜனாதிபதிக்கு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

இங்குமேலும்கருத்துதெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க -

பாதுகாப்பு துறைக்குள் பரந்து காணப்படும் விடயப் பரப்புக்களை அறிந்துகொண்டுபொதுமக்களுக்கும் அரசஅதிகாரிகளுக்கும்அவசியமான குறுகிய கால பாடநெறிகளை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தேசிய பாதுகாப்புக்கான மூலோபாய திட்டமிடல் ஒன்றை தயாரிக்க வேணடுமெனவும்வலியுறுத்தினார்.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் அட்மிரல் எட்வின் தோமஸ் லயிடனின் இல்லமாக காணப்பட்ட தற்போதைய தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவன கட்டடம் 1942 இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமான காலத்தில் இந்து சமுத்திரம் தொடர்பிலான மூலோபாய தீர்மானங்களை மேற்கொள்வதற்கான மைய மாக விளங்கிமையையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார். அவ்வாறு இங்கிருந்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் இந்து சமுத்திரத்தில் பிரித்தானியர் ஆட்சியை நடத்திச் செல்வதற்கான பிரதான காரணியாக விளங்கியதாகவும் தெரிவித்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், மறைந்த தலைவர்களான டீ.எஸ்.சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, சிறி மாவோ பண்டாரநாயக்க போன்றவர்கள் இந்துசமுத்திரவலயத்தைசெல்வந்த நாடுகளின் மோதல்களிலிருந்து பாதுகாப்பதை உறுதிப்படுத்த முன்வந்தனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அந்ததெரிவுகளைபிற்காலத்தில் பெண்டுன்க் மாநாட்டிலும்ஜகார்த்தா பிரகடனத்திலும்ஏற்றுகொள்ளப்பட்டு சுயாதீன கொள்கையுடன் சர்வதேச தொடர்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்பணிப்பை வெளிப்படுத்தியிருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட் டினார்.

உலகளாவிய அரசியல் மாற்றங்களின் போது, ஒருதலைபட்சமானஉலகம்மிகவும்சிக்கலானதும் ஒருங்கிணைந்ததுமாக மாறும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சியின் கீழ் ஐக்கியஅமெரிக்காவின்வெளியுறவுக் கொள்கைகளும் அண்மைக்கால மாற்றங்களும்அந்தநிலைமையை மேலும் கடினமானதாக மாற்றியிருப்பதாகவும் தெரிவித் தார். (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## ஆட்கடத்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக்கொண்டுவருவதற்குரிய குறைந்தபட்சதராதரங்கள்இலங்கை ஆட்சியாளர்களால் இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை. இருப்பினும்அதனைஎட்டுவதற்கான குறிப்பிடத்தக்களவிலான முயற்சிகளை ஆளும் தரப்பு முன்னெடுத்திருக்கின்றது. ஆட்கடத்தலில் ஈடுபடுவோரைக் கைதுசெய்தல் மற்றும் தண்டனை வழங்கல், ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகளில் சர்வதேச கட்டமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் போன்றன இம்முயற்சிகளில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றிஆட்கடத்தலால் பாதிக்கப்பட்ட பெருமளவானோர் ஆட்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெண்கள் ஆட்கடத்தலுக்கு இலக்காகக்கூடியவாய்ப்பைஅளித்த சில நெருக்கடியான குடியகல்வு கொள்கைகள்மறுசீரமைக்கப்பட்டன.

ஆட்கடத்தலுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முகவர் நிலையங்கள் தொடர்பில் விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு, அவற்றின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்டதுடன் அவை கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டன. எது எவ்வாறெனினும் சில முக்கிய விடயப்பரப்புக்களில் இலங்கை அரசாங்கம் குறைந்தபட்ச தராதரங்களைப் பூர்த்திசெய்யவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிரான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல், ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கானமுயற்சிகளைத்தீவிரப்படுத்தல், பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான உதவிகள் மற்றும் சேவைகளின் கிடைப்பனவை உறுதிசெய்தல், வெளிநாட்டுப்பயண முகவரகங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க முன்னர் உரியவாறு கண்காணித்தல், குடியகல்வு வழிகாட்டல்கள் பால் அடிப்படையில்வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளைஇலங்கைஅரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

மேலும், வீட்டுப்பணியாளர்களுக்குரிய வழிகாட்டல்களை சீராக வகுப்பதுடன், அவர்களது பணியிடத்தைக் கண்காணித்தல், தொழிலாளர்சார்ந்தஆட்கடத்தலைக் கண்டறிவதற்கான வள ஒதுக்கீடுகளை அதிகரித்தல், ஆட்கடத்தல் தொடர்பில் பொலிஸார், நீதிபதிகள், குடிவரவு - குடியகல்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் விழிப்புணர்வூட்டல் ஆகிய நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக சேவையாற்றிய ஏற்றுமதியாளர்களைப் பாராட்டும் வகையில் இலங்கை ஏற்றுமதிச் சபையினால் வருடாந்தம் மேற்படி விருது விழா ஏற்பாடு செய்யப்படுவதோடு, 2021/22 மற்றும்2022/23ஆம்வருடங்களில் இலங்கையின்சிறந்தஏற்றுமதியாளர் இம்முறை பாராட்டப்பட்டனர். அனைத்து நிதித்துறைகளையும் உள்ளடக்கி13விருதுகளும்உற்பத்தி மற்றும் சேவை துறைகளுக்காக 15 விருதுகளும் இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டன.

விண்ணபதாரர்களின் செயற்திறன் அடிப்படையில் நடுவர்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்டமைக்குஅமைவாகதகுதி பெற்ற பிரிவுகளுக்காக இம்முறை விருது வழங்கப்பட்டமையும் சிறப்பம்சமாகும். இதன்போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஜனாதிபதியினால் நினைவு சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அங்குஉரையாற்றியஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது.

கடந்த இரு வருடங்கள் நம் அனைவருக்கும் மிகக் நெருக்கடியானதாகஅமைந்திருந்தது.நாட்டில் பொருளாதார வளர்ச்சியின்மையும், வர்த்தகத் துறைக்கும் நாட்டுக்கு சாதகமான நிலைமை காணப்படாமையும்அதற்கான காரணமாக அமைந்தது.

சுதந்திரத்திக்குப் பின்னர் இலங்கைக்கு ஏற்றுமதி பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தி இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு 04 சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தன.

சிங்கப்பூர், மலேசியா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் 60,70 ஆம் நூற்றாண்டுகளின் தசாப்தங்களின் ஆரம்ப காலத்தில் ஏற்றுமதி பொருளாதாரத்துடன் அவர்களின் பயணத்தை தொடர்ந்தனர். நாம் பொதுவுடமை பொருளாதார கொள்கையை பின்பற்றியதால் நமக்கான வாய்ப்புக்கள் நழுவிச் சென்றன.

அதேபோல்,80ஆம்தசாப்தத்தின் ஆரம்ப பகுதியில் நாம் ஏற்றுமதி பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்தினோம். அதற்கிடையில் போர் வந்தமையால் எமது வளங்களை போர் வெற்றிக்காக பயன்படுத்த வேண்டியிருந்தது. அந்தநேரந்திலும்நமக்கானவாய்ப்பு இல்லாமல் போனது.

போர்நிறைவுற்றபின்னர்அடுத்த வாய்ப்பு கிட்டியது இருப்பினும் அந்த நேரத்தில் வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதபொருட்கள்தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இன்று சிங்கப்பூர், மலேசியா, இந்துநேசியா, தாய்லாந்துபோன்றநாடுகள்எம்மை கடந்துச் சென்றுள்ளன.

அதனால் இதுவே நமக்கு கிடைத்திருக்கும் இறுதி சந்தர்ப்பமாகும். கடந்த நெருக்கடியான காலத்தில் இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் பலரும் நாட்டை விட்டுச் சென்றனர். அவ்வாறு வெளிநாடுகளுக்குச்சென்றவர்கள் நாடுதிரும்பினாலும்அவர்களுடைய இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் இலங்கைக்கு வரப்போவதில்லை. அவ்வாறான நிலைமைகளை மாற்றியமைக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண வரவு செலவுத் திட்ட இடைவெளி, வர்த்தக நிலைமை என்ற இரண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.அவைஇரண்டும் ஒன்றோடு ஒன்று தாக்கம் செலுத்த கூடியவையாகும். வரவு செலவுத் திட்ட இடைவெளி தொடர்பில் அவதானம் செலுத்தும் போது வரி வருமானத்தை அதிகரித்து கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும்.தற்போதுபணம் அச்சிட முடியாது. வெளியிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது.

இம்முறை வரவு செலவுத் திட்டமே நாம் கடன் பெற்றுக் கொள்ளாத முதலாவது வரவு செலவுத் திட்டமாகும். நாம் கடன் பெற்றுக்கொள்ளாமல்எமதுசெலவுகளை இவ்வாறு நிவர்த்திப்பது. அதற்காக 'வற்' வரியை அதிகரிக்க நேரிடும். அதற்காக எம்மை விமர்சித்தாலும் எதிர்காலத்தில் அதுபற்றிய புரிதல் ஏற்படும்.

அத்தோடு நமது ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். தொழிற்சாலைத் துறையினையும் வலுவூட்ட வேண்டும். இம்முறை வரவு செலவுத்திட்டத்தில்முதல்முறையாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.தேசியவலுவூட்டலுக்காக தேசிய வலுவூட்டல் ஆணைக்குழுவை நிறுவ எதிர்பார்க்கிறோம். அதேபோல்ஏற்றுமதிக்குஒத்துழைப்பு கைக்கொடுப்பதற்கான பல்வேறு துறைகள் காணக்கின்றன.

ஆனால்தற்போதுள்ளஏற்றுமதித் துறைகளை மேம்படுத்துவது மாத்திரம் இதற்கு போதுமானதாக இருக்காது.புதியஏற்றுமதிதுறைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதற்குப் புதிய முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுராதபுரம் காலத்திலிருந்து இலங்கை விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றது. முதலில் அரிசி பின்னர் பலசரக்குப் பொருட்கள், குறிப்பாக கறுவா, அதைத் தொடர்ந்து தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது, ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறும் வரை இதைத்தொடர்ந்தோம்.ஆனால்நாம் தொடரந்தும்விவசாயப்பொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளர்களாக இல்லை. ஆனால் இது நமக்குப் பரிச்சயமான துறை. இலங்கையின் மூலதனத்தளம்வர்த்தகத்திலிருந்து அன்றி, விவசாயத்தில் இருந்தே கட்டியமைக்கப்பட்டுள்ளது.

அதற்கான திறன் எம்மிடம் உள்ளது. எனவே, நாம் அதிலிருந்து விலகி இருக்கக் கூடாது. விவசாயத்திற்குத் தேவையான நிலத்தை இப்போதுநீங்கள்தேடிக்கொள்ளலாம். விவசாயத்தில்நவீனதொழில்நுட்பம் இணைக்கப்படுவதால், இளைஞர்களும் அதில் இணைவார்கள் என நம்புகிறோம்.

இலங்கையில் விவசாய தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவவும் திட்டமிட்டுள்ளோம், தற்போதுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுவருகின்றன. நீங்களும் இதற்கு ஆதரவு வழங்கலாம்.இந்தச்செயற்பாடுகளை தொடருமாறு அனைவரையும் அழைக்கின்றோம் என்றார்.

## மாவீரர் தினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில்ஜனாதிபதியேபொறுப்புக் கூற வேண்டும். ஆனால் இன்று அவருக்கு அரசமைப்பு பேரவையினால் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் தான் நான் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கும், 21 ஆவது திருத்தத்துக்கும் எதிராக வாக்களித்தேன்.

உலகத்தில் மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட விடுதலை புலிகளை அழித்துள்ளோம். இலங்கையில் புலிகள் அமைப்பை அழிந்திருந்தாலும். புலிகளின் கொள்கையுடைவர்கள் சர்வதேச மட்டத்தில் துடிப்புடன் உள்ளார்கள், செயற்டுகிறார்கள். இலங்கையில் மீண்டும் போர் ஒன்று தோற்றம் பெற்றால்அதனைஎதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளார்களா ? என்பதை ஆராய வேண்டும்.

போரை வெற்றிக் கொண்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் விசா வழங்குவதில்லை. இராணுவ அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. இந்நிலை தற்போதை இராணுவ அதிகாரிகளுக்கும் சேவை ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜெனிவா விவகாரத்தில் இலங்கை தவறிழைத்துள்ளது. 2009.01.19 ஆம் திகதி போர் முடிவடைந்ததை தொடர்ந்து 2009.05.27 ஆம் திகதி ஜேர்மனி உட்பட 17 நாடுகள் ஒன்றிணைந்து இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை கொண்டு வந்தன. போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் நாயகம் பாங்கி மூன் பலபரிந்துரைகளை முன்வைத்தார்.

அதனை தொடர்ந்து தருஸ்மன் அறிக்கை சமர்ப்பிக்கப்படப்பட்டது. அதில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக பொய்யான தரப்படுத்தல் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கைக்கு முரணாக பரணகம குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நல்லாட்சி அரசாங்கம் 30/-1 பிரேரணைக்கு இணையனுசரனை வழங்கியது. யுத்தகாலத்தில்இடம்பெற்றயதார்த்த உண்மைகள் ஜெனிவாவுக்கு குறிப்பிடப்படவில்லை. ஆகவே இனியாவது இந்த தவறை திருத்திக் கொள்ள வேண்டும்.

மாவீரர் தினம் பற்றி தற்போது பேசப்படுகிறது.நாட்டைபிளவுப்படுத்த ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை நினைவுகூறுவதற்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல அது கோழைத்தனமானது என்பதை பகிரங்கமாக குறிப்பிடுவேன்.

மாவீரர்தினம்என்றுகுறிப்பிட்டுக் கொண்டுஇல்லாதபிரச்சினைகளை தோற்றுவிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், ஏனைய தமிழ் அரசியல் தரப்பினரும் முயற்சிக்கிறார்கள். விடுதலை புலிகள் தமிழர்களை பயணக் கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்கு சென்றார்கள். 2 இலட்சத்து 95 ஆயிரம் பேரை இராணுவத்தினர் மீள்குடியேற்றம் செய்தார்கள். 8000 தமிழர்களுக்கு இராணுவத்தினர் தமது சொந்த நிதியில் வீடு கட்டிக் கொடுத்தார்கள். அப்போது கூட்டமைப்பினர் தமிழ் தேசியம் பற்றி பேசிக் கொண்டு வரவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுகிறது. கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன்னர் பிரபாகரன் முன்னிலையில்சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாரிய தவறிழித்துள்ளார். ஹிட்லர், முசோலினி,சதாம் உசேன் ஆகியோர்அழிக்கப்பட்டதன்பின்னர் அவர்களின்அரசியல்செயற்பாடுகள், அரசியல் கட்சிகள் அழிக்கப்பட்டன. அதே போல் பிரபாகரனை அழித்தவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் அழித்திருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் அனுதாபம் இன்று பூமியதிர்ச்சியாக மாற்றமடைந்துள்ளது என்றார்.

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கலந்துகொண்டீர்கள். நீங்கள்,ராஜபக்ஷக்களுக்குமாற்றீடாக செயற்படுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றனவே?

பதில்: நான் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மஹிந்த ராஜபக் ஷவின் பிறந்த நாளுக்கு வாழ்த்துதெரிவிக்கின்றேன்.அவரும் எனது பிறந்தநாளுக்கும் வாழ்த்து தெரிவிப்பார். அந்த வகையில் இம்முறை நாமல் ராஜபக் ஷவின் அழைப்பில் நான் பிறந்த தினத்தில் பங்கேற்றேன்.

இப்போது அவர்களின் கட்சி பிளவுபட்டுள்ளது. என்னுடன் குறிப்பிட்டஅளவானவர்களும்,எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் குறிப்பிட்ட அளவானவர்களும் உள்ளனர்.

கேள்வி: ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியிடமிருந்து ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் ஏதும் விடுக்கப்படுகின்றதா?

பதில்: அந்தக் கட்சியினருக்கு தேவையான தருணத்தில் தம்மை வந்துசந்திப்பார்கள்.சிலவேளைகளில் அவர்கள் சந்திக்க மாட்டார்கள். அவ்வாறான நிலைமைகளில் அழுத்தங்கள் விடுக்கப்படுவதாக இல்லை.

கேள்வி: அண்மையில் பொருளாதார நெருக்கடி தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளநிலையில், பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனைகூட உயர் நீதிமன்றத்தினால் வழங்கப் படவில்லையே?

பதில்:- ராஜபக்ஷக்களின் காலப்பகுதியிலேயே பொருளாதார நெருக்கடிஏற்பட்டது. பிரதமர்மஹிந்த ராஜபக் ஷ பதவி விலகியதும், ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரின் பக்கம் திரும்பினார். அப்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தது. ஆனால், அவர் பொறுப்பேற்க மறுத்துவிட்டார். ஒட்டுமொத்த அரசியல் அமைப்புமே தகர்ந்தது.

தொடர்ச்சி 9ம் பக்கம்...



## நாடு....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் பொறுப்பை ஏற்க முன்வரவில்லை.காலஅடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்திடமும் செல்வதற்கும் தாமதமானது. ஜூலை மாதம் ஜனாதிபதி பதவி விலகிய சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சி பொறுப்பேற்கவில்லை. பெரும்பாலானோர் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டனர். அது தொடர்பிலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். அதனை விடுத்து, ஒரு பகுதியில் மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது.

கேள்வி: ஆகக்குறைந்தது பொறுப்புக்கூற வேண்டியவர்னள் மன்னிப்புக்கோர வேண்டும் அல்லவா? அத்துடன் ராஜபக் ஷக்கள் அதற்கு பொறுப்பானவர்கள் இல்லை என்கின்றீர்களா?

பதில்:- நாடு வங்குரோத்து அடைந்ததில் ராஜபக் ஷக்களுக்கும் பொறுப்பு உள்ளது. இந்த விடயத்தில் அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளதாக நினைகின்றேன். அந்த காலப்பகுதியில் வாக்குறுதிகளை வழங்கி மக்களை மகிழ்வித்து அரசியல் செய்ய பலர் பழகிக்கொண்டனர்.

கேள்வி: அடுத்துநடைபெறவுள்ள இந்தியப் பொதுத்தேர்தல் தொடர்பில் உங்களின் எதிர்வு கூறல் என்ன?

பதில்: இந்திய தேர்தல்கள் என்ன சொல்கின்றன என்று பின்னர் பார்ப்போம், நாடாளுமன்ற பா.ஜ.க.விற்கு சாதகமான நிலை காணப்படுகின்றது. புதுடில்லியில் என்ன நடந்தாலும் அதனுடன் வாழ்வதற்கு இலங்கை பழகிக்கொள்ளவேண்டும்.

கேள்வி: இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் இலங்கை கிரிக்கெட்டை நிர்வாகம் செய்கின்றார் என்ற சர்ச்சையான கருத்துக்கள் பற்றி கவனம் செலுத்தினீர்களா?

பதில்:- இந்திய கிரிக்கெட்டின் செயலாளர் ஷா, இலங்கை கிரிக்கெட்டை நிர்வகிக்கவில்லை அவர்கள் ஷா இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு ஆதரவளிக்கின்றார் எனகருதுகின்றனர். நான் ஷாவுடன் பேசினேன். அவர் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களுக்காக நான் எனது வேதனையை வெளியிட்டேன் அவருடைய பெயர் தேவையில்லாமல் உள்ளீர்க்கப்பட்டமைக்காக மன்னிப்புக் கோரினேன்.

## அரசமைப்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவது? என்றார்.

அப்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, ஜனாதிபதி அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. அவரின் பெயரை அங்கீகரித்து நியமித்தால் பிரச்சினைகளுக்குத்தீர்வுகிடைக்கும் என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சித்தார்த்தன் பெயர் சிறந்தது. அதில் எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் உங்களுடன் இணைந்து செயற்படுகின்ற பிறிதொருதரப்பினரும்ஒருபெயரை முன்மொழிந்துள்ளார்கள் என்றார்.

அந்தப்பெயர்என்னஎன்றுஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பிய போது, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் உறுப்பினர் அல்லர். ஆனால் உங்களுடைய அணியினர்தான், அதனை முன்மொழிந்துள்ளார்கள். அவர்களுக்கு நீங்கள் தான் முன்வரிசையில் ஆசனங்களை ஒதுக்கியுள்ளார்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவேஇதுநீங்கள்தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினையாகும் என்றார்.

அப்போது மீண்டும் ஹர்ஷ டி சில்வா, நீங்கள் எங்கள் மீது குற்றம் சாட்டுகின்றீர்கள். எங்களது தரப்பில் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. அதனை சபாநயகரே நியமிக்க வேண்டும். வெறுமனே எம்மைக் குற்றம் சாட்டி பயனில்லை என்றார்.

அதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீங்கள்தான் எதிர்க்கட்சியினர். நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். உங்களுக்கு நாலக கொடஹேவாவே பொருளாதார ஆலோசனைகளை வழங்குகின்றார். ஆகவேஉங்களை குறைகூறவில்லை என்றார்.

இச்சமயத்தில் சபைக்குள் பிரசன்னமானஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புசித்தார்த்தனின்பெயரை முன்மொழிந்தனர். அந்தப்பெயரை சபாநாயகர் ஆராய்ந்துள்ளார். ஆகவே சித்தார்த்தனை நியமிக்க வேண்டும்என்றநிலைப்பாட்டில்நாம் உள்ளோம். ஆகவே அதுதொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டியவர் சபாநாயகர். அவருக்கு அதில் பிரச்சினை காணப்படுகின்றது. இதனை நீங்கள் சபாநாயகரை அழைத்து தெளிவுபடுத்திக் கொள்வதே சிறந்தது என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, உங்களைப் போன்ற நிலைப்பாட்டில் தான் நானும் உள்ளேன். ஒவ்வொரு குழுக்களுக்கிடையேபிரச்சினைகள் இருப்பதாகநான்நினைக்கின்றேன். எனக்கு அதிகாரம் இருந்திருந்தால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை நியமித்திருப்பேன் என்றார்.

அப்போது, இடைமறித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி அவர்களே இந்த விடயம் சம்பந்தமாக ஆராயுமாறு சபாநாயகரித்தில் கோரிக்கையை முன்வையுங்கள். இதனைத் தெளிவுபடுத்துமாறு அவரைக் கோருங்கள். அவரை சபைக்கு அழைக்குமாறு குழுத்தலைவரைக் கோருங்கள் என்றார்.

பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீங்கள் சபாநாயகருக்குதெளிவுபடுத்தவதற்கு பொருத்தமான நேரத்தினை வழங்குங்கள். ஆனால் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நீங்கள் தான் ஒரு கட்சியாக அடையாளம் கண்டுள்ளீர்கள். அவர் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதியிடம் கேளுங்கள். அவர்கள் இப்போது முன்வரிசை ஆசனத்தில்அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் பொதுஜன பெரமுனவில் இருந்தவர்கள். அவர்களுக்கு பின்வரிசை ஆசனங்களே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு முன்வரிசை ஆசனங்கள் வழங்கப்பட்டமையை நீங்களே அங்கீகரித்தீர்கள். அவர்களை அரசியல் கட்சியாக ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்றார்.

அப்போதுமீண்டும்இடைமறித்த சஜித்பிரேமதாச,ஜனாதிபதிஅவர்களே உங்களின் அறியாமையை இட்டு நான் கவலைப்படுகின்றேன். நாடாளுமன்ற ஆசனங்களை வழங்குவதும், தீர்மானிப்பதும்நான் அல்ல. அதேபோன்று அரசியல் கட்சிகளுக்கான அங்கீகாரத்தினை அளிக்கும் உரிமை எமக்கு இருப்பதாக கூறுகின்றீர்கள். அது உண்மையிலேயே சபாநாயகரிடத்திலேயே உள்ளது என்றார்.

அச்சமயத்தில் மீண்டும் ஜனாதிபதி, சாபாநயகர் தான் ஆசனங்களை ஒதுக்கீடு செய்வது என்பது எனக்கு தெரியும். ஆனால் அதற்கு முன்னதாக ஆளும், எதிர்த் தரப்புக்களுடன் கலந்துரையாடி அங்கீகாரம் பெறுவதுசம்பிரதாயமாகும். ஆகவே உங்களது அங்கீகாரத்தின் பின்னர் தான் ஒதுக்கீடு நடைபெற்றிருக்கும். ஆகவே அவர்களின் விடயத்தினை நீங்கள் முன்னாள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி முடிவுக்கு வாருங்கள் என்றார்.

அப்போது சஜித் பிரேமதாச, இங்குள்ளவர்களுக்கு வெஸ்மினிஸ்டர் கலாசாரம் தெரியாது போய் இப்போது மெதமுலன கலாசரம் தான் தெரிகின்றது' என்றார்.

அச்சமயத்தில், ஜனாதிபதி ரணில், அப்படியென்றால் அவர்கள் முன்வரிசையில் அமர வேண்டாம் என்கின்றீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

அதன்போது, சஜித் பிரேமதச , நான் கூறவருகின்ற விடயத்தினை நீங்கள் திரிவுபடுத்த வேண்டாம். யார் எங்கு அமர்வது என்பதை தீர்மானிப்பது பொதுமக்களே. ஆகவே நாங்கள் தேர்தலுக்குச் செல்வோம். அதேநேரம், இந்த சபையில் உள்ள கமராக்களையும், ஒலிவாங்கிகளையும் செயற்படுத்துபவர்கள் பக்கச்சார்பாக செயற்படுகின்றார்கள் என்றார்.

இதன்போது எழுந்த ஜனாதிபதி ரணில், எனக்குபிரச்சினை இல்லை. அனைத்து கமராக்களையும், ஒலிவாங்கிகளையும் அவர் பக்கமாக திருப்புங்கள். அதற்கு நான் உடன்படுகின்றேன் என்றார்.

அதன்போது குறுக்கீடு செய்த சஜித் பிரேமதாச, இது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அல்ல. நான் கூறும் விடயங்களை நீங்கள் தொடாச்சியாக திரித்துக் கூறிக்கொண்டிருக்கின்றீர்கள் என்றார்.

அப்போது, ஜனாதிபதி ரணில், நான்நகைச்சுவையாககூறவில்லை. அனைத்து கமராக்களையும் அவர் பக்கமே திருப்பி வையுங்கள். நாள் முழுவதும் அவ்வாறு வைப்பதற்கு நான் இணங்குகின்றேன் என்றார்.

அச்சமயத்தில், சஜித் பிரேமதச, நாட்டின் தலைவர் சிறுபிள்ளைத்தனமாக செயற்படுகின்றார் என்பதைநான்சுட்டிக்காட்டுகின்றேன் என்றார்.

இடையில் ஹர்ஷ டி சில்வா எழுந்து, ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும்சித்தார்த்தன்எம்.பியின் நியமனத்தில் ஒரே நிலைப்பாட்டில் உள்ளனர். பின்னர் இங்கு வேறு என்ன பிரச்சினை உள்ளது. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காண முடியும். அதனை காணுங்கள் என்றார்.

அப்போது, ஜனாதிபதி ரணில், என்னால் தீர்மானம் அறிவிக்க முடியாது. தீர்மானம் எடுக்க வேண்டியவர் சபாநாயகர். நீங்கள் அவரிடத்தில் தான் தீர்வினைக் கோர வேண்டும் என்றார்.

அதன்பின்னர் சஜித் பிரேமதாச, இந்த நாட்டின் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் நிறைவேற்றுத்துறையின் தவறான கையாளல் தான் இப்போது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. அரசமைப்பு சபை என்பது வயலின் மத்தியில் உள்ள பொம்மை அல்ல என்றார்.

## நிரந்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இருக்கிறன. அதனால் வடக்கில்பலமானபொருளாதாரத்தை உருவாக்குவதேஎமது இலக்காகும்.

நாங்கள் தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எமது தொழிலாளர்களை நீண்டகாலமாக அனுப்பி வருகிறோம்.

அதன் பிரகாரம் தொழில் அமைச்சர் அடுத்த கட்டமாக இஸ்ரேலுக்கு தொழிலாளர்களை அனுப்ப ஒப்பந்தம் செய்திருக்கிறார் என்றாலும்இஸ்ரேலுக்குதொழிலுக்கு செல்லத் தற்போது 10ஆயிரம் பேர் தயாராக இருப்பார்கள் என நான் நினைக்கவில்லை.

போர் இடம்பெறும் நாட்டுக்கு செல்ல யாரும் விரும்பமாட்டார்கள் என்றாலும் தற்போதைய நிலையில் இஸ்ரேலுக்கு செல்வது எந்தளவு பொருத்தம் என தெரியாது. என்றாலும் இது தொடர்பாக நான் தொழில் அமைச்சரிடம் வினவுகிறேன்.

அத்துடன் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. காஸா மீது இஸ்ரேலின் தாக்குதலை நாங்கள் வன்மையாக கண்டித்திருக்கிறோம்.

ஹமாஸ் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலையும் நாங்கள் கண்டித்திருந்தோம். என்றாலும் இதற்கு தீர்வு காஸா மீது தாக்குதல் மேற்கொள்வதல்ல.

அதனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வந்த விடயம்தான் இதனை காஸாவை பார்த்து மேற்கொள்ள முடியாது. மேற்குக்குரையை நோக்கி பார்த்து, அங்குவந்து குடியமர்ந்த இஸ்ரேலியர்களை அகற்றுவதன் மூலமமே இதனை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன்பலஸ்தீனஅதிகாரசபை ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணுவது தொடர்பாக பலரும் கதைத்து வருகின்றனர். அமெரிக்காவும் பேசி இருந்தது. அதகாரசபை ஊடாக தீர்வுகாண முடியும்எனநான்நினைக்கவில்லை.

அரசியல் தீர்வு இல்லாமையே இதற்கு காரணமாகும். அதனால் அரசியல் தீர்வொன்றை வழங்குவதன் மூலமே அந்த பிரச்சினைக்கு தீரவு காணமுடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

அத்துடன் இலங்கையிலும் நாங்கள் வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி வடக்கை அபிவிருத்தி செய்ய இருக்கிறோம். ஏனெனில் வடக்கில் சிறந்த பொருளாதாரம் ஒன்று இருக்கிறது. குறிப்பாக பசுமை பொருளாதாரம் எரிசக்தி தொடர்பானபொருளாதாரம்போன்ற பல வளங்கள் அங்கு இருக்கிறன.

அதனால் அடுத்த தசாப்தத்தில் வடக்கில்பலமானபொருளாதாரத்தை உருவாக்குவதே எமது இலக்காகும் - என்றார்.

# பரதம் குறித்த மௌலவியின் கருத்துக்கு ஜம்இய்யத்துல் உலமா சபை கண்டனம்

மௌலவி ஒருவரால் பரதநாட்டியம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து மிகுந்த கவலையளிப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மதங்கள் மற்றும் கலாசார விடயங்கள் நிந்திக்கபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இதனை வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த சர்ச்சைக்குரிய கருத்து இந்துமக்கள்மத்தியில்பாரிய அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தது. இதற்கு நாம் எமது கவலையையும், கண்டனத்தையும்தெரிவிக்கிறோம். இதேவேளை தவறை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுத்துள்ள உலமா சபைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இதுபோன்ற தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருக்க உரிய வழிகாட்டுதல்களை முன்னெடுக்க வேண்டும் என உலமா சபையிடம் இந்து அமைப்புகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. (05)

# முறையானதொரு வரவு - செலவுத் திட்டம் 75 வருடங்களாக சமர்ப்பிக்கப்படவில்லை

### ஜேவிபியின் யாழ். அமைப்பாளர் குற்றச்சாட்டு

கடந்த 75 வருடங்களாக மக்களின்பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலான வரவு - செலவு திட்டங்கள்முன்வைக்கப்படவில்லை என தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஆர். சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துரைக்கும்போஹிது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல் தலையீடின்றி கிரிக்கெட்டை பாதுகாக்கவேண்டியது பொறுப்பாகும்

## ஜனாதிபதி ரணில் ஆணித்தரம்



இருதரப்பினருக்குஇடையிலான மோதல் காரணமாக இந்நாட்டின் கிரிக்கெட் சரிவை சந்தித்துள்ளது. எனவே, அரசியல் தலையீடின்றி கிரிக்கெட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கிரிக்கெட் தொடர்பிலான பிரச்சினையில் எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்பதோடு, சித்ரசிறி அறிக்கைக்கமைய புதிய கிரிக்கெட் சட்டமொன்றைஉருவாக்க வேண்டியதன் அவசியத்தை தான் பலதடவைகள்விளக்கியிருந்தாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் புதன்கிழமை உரையாற்றுகையிலேயேஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டவை வருமாறு -

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை நிறைவேற்ற முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது. அதற்காக வாக்களித்த 120 எம்.பி.க்களுக்கும் நன்றி தெரிவிகிறேன். அந்த பலத்துடன் நாம் முன்னேறிச் செல்வோம்.

மேலும், எதிராக வாக்களித்த 77 பேருக்கும் நன்றி. அவர்களுக்கு இந்தசபையில்ஒத்துழைப்புஇல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக நீதிமன்றம்தீர்ப்புவழங்கமுடியும்என நாடாளுமன்றஉறுப்பினர்லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அதற்கான சூழலை நானே உருவாக்கினேன். நாட்டின் ஜனநாயகத்தையும் வலுப்படுத்தியுள்ளோம். எனவே, வரவு-செலவுத்திட்ட விடயத்திலாவது எமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி ஒரு சட்டத்தரணி. இதற்கு முன்னர் அவர் வழக்குகளைச்சந்தித்துள்ளார். அவர் நிரபராதிஎன்றால்விடுவிக்கப்படுவார். அந்த ஜனநாயகத்தை இந்த நாட்டில் உருவாக்கியுள்ளோம். எனவே, நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும்நடத்துவோம். அதன் பின்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். அது தொடர்பான அறிக்கை எனக்கு கிடைத்துள்ளது. ஏபிசி எண்டர்பிரைசஸ் தியாகராஜா விநாயகமூர்த்தி, எம்.பி.டி.யூ.கே. மாபா பத்திரன மற்றும் 24 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2023, 2024ஆம்ஆண்டுகளில் திருகோணமலைசிறைச்சாலைக்கு உலர் உணவு மற்றும் பாண் விநியோகத்திற்கான கேள்வி மனுவை ஏபிசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கியமை தொடர்பிலேயே அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்மானித்துள்ளமை மற்றும் 25 லட்சம் ரூபா நட்டஈடு பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் எவ்வாறான தகவல்கள் அவசியம் என அறிவித்தால் சட்டமா அதிபரிடம் வினவியபின்னர்அறிவிக்கமுடியும்.

அடிப்படை உரிமை மீறலே இங்கு நடந்துள்ளது. குற்றவியல் வழக்குக்கு போதிய ஆதாரங்கள் இல்லைஎன்றும், அதுதொடர்பிலான பிரத்தியேகமான சட்டத்தின் கீழ் செயற்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நம்பிக்கை இல்லை என்பதே இங்குள்ள பிரச்சினையாகும். நாம் அனைவர் மீதும் மக்கள்நம்பிக்கைஇருக்கிறது. உரிய நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை என்று கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது தொடர்பில் விரிவான விளக்கம் அவசியப்படுகிறது.

ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மை இருக்குமாயின் ஆட்சியமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரப்படும். இது தான் எமது நாட்டின் பொதுவான சம்பிரதாயம். ஆனால் நமது எதிர்க்கட்சித்தலைவர்அதைச்செய்ய வில்லை. இது மக்கள் நம்பிக்கை மீறலாகும். இந்த பிரதமர் பதவியை ராஜபக்ஷவினர் எனக்குத் தரவில்லை. எம்.பிக்கள் என்னிடம் வந்துபதவியைஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். நான் அதனை ஏற்றுக்கொண்டேன். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு கோரினேன். அதனால் மக்கள்நம்பிக்கைஎன்னிடத்திலேயே உள்ளது. எனக்கு ஆதரவளியுங்கள்.

நான் இந்தப் பொறுப்பை ஏற்க முன்வந்ததால் எனது வீட்டுக்கு தீ மூட்டப்பட்டது. நாடாளுமன்றமும் சுற்றி வளைக்கப்பட்டது. என்னை பதவி விலகுமாறு எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். பெரும்பான்மையுடன் வாருங்கள் இல்லாவிட்டால் பதவி விலகப் போவதில்லைஎன்று அறிவித்தேன்.

நாடாளுமன்றத்தை முற்றுகையிட வந்தபோது கட்சித் தலைவர்கள் தப்பியோடினர். அதனால் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்குமாறு இராணுவத்தளபதிக்குப் பணிக்க வேண்டியிருந்தது. அதனை ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பது தெரிந்துவிடும். எனவே நாடாளுமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிரிக்கெட் விவகாரத்தில் நான் சிலரைப் பாதுகாக்க முற்படுவதாகக்கூறப்பட்டது. கிரிக்கெட் விவகாரம் நீண்ட கால பிரச்சினை. இரு தரப்பினருக்கு இடையிலான மோதல் காரணமாக கிரிக்கெட் சரிவை சந்தித்துள்ளது. அதற்கான தீர்வாக புதிய சட்டத்தை உருவாக்கி சட்டத்துக்கமைய சரியான குழுவை தெரிவு செய்ய வேண்டும் என்றே நான் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தியுள்ளேன். அதற்காகவே சித்ரசிறி அறிக்கையை பின்பற்றி அந்த சட்டத்தை உருவாக்குமாறு கூறினேன்.

குறித்த வழக்கு தொடர்பில் அமைச்சருக்கு அறிவுறுத்தியிருந்தேன். இவ்வாறான நிலைமைகள் தொடரும் பட்சத்தில் ஐ.சீ.சீ தடையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் கூறியிருந்தேன்.

அதேபோல் சுற்றுலா பயணிகள் வருகையும் குறைவடையும் என கூறினேன். அது தொடர்பிலான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் அதிலிருந்துவிடுபட முடியாதென்றும் கூறினேன். அமைச்சரவைக்குள்ளும் அதன் பின்னரும் இதுபற்றிப் பேசினோம்.

தனக்கு சட்டத்தரணியொருவர் அவசியம் என அமைச்சர் கூறியிருந்தார். மறுதினம் இவர்கள் வழக்கு தொடுக்கப் போவதாக எனக்கு தகவல் கிடைத்திருந்தது. அதற்கு தயாராகுமாறு கூறிய போது சட்டமா அதிபரும் அங்கு இருந்தார். முன்னாள் ஜனாதிபதியும் இருந்தார். இவருக்கான முன்னிலையாகுமாறு சட்டமா அதிபரை நாம் வலியுறுத்தினோம்.

இவர்கள் தாமதமாக சென்றமையால் வழக்கு நிறைவடைந்திருந்தது. அது தொடர்பில் அமைச்சரிடம் அறிக்கை கோரியுள்ளேன். எவ்வாறான தீர்ப்பு கிடைக்கும் என்பதை கணிக்க முடியாது. இருப்பினும் போட்டிகள் நடத்தப்படவிருக்கும் தற்போதைய சூழலில் நீதிமன்ற தீர்ப்பு அவசியமாகிறது. இந்தத் தடைஉத்தரவுசெல்லுபடியாகுமான என்பதும் எமக்குத் தெரியாது.

அதேநேரம், ஐ.சீ.சீயுடனும் கலந்தாலோசித்தேன். அரசியல் தலையீடு உள்ளதாக அவர்கள் குற்றம்சாட்டினர். சம்மி சில்வாவை பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை. பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதனாலேயே புதிய சட்டத்தை கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தினேன்.

தற்போது எமக்கு எதிராக 02 குற்றச்சாட்டுக்கள்உள்ளன. அதன்படி கிரிக்கெட்சபையைநாம்கலைத்ததாக கூறப்படுகிறது. அதற்கு அமைச்சரின் செயற்பாடு சட்டபூர்வமானதா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்குமென நான் தெரிவித்துள்ளேன். மறுமுனையில் நாடாளுமன்றம் இதற்காக ஒன்றுபட்டதெனவும் குற்றம்சாட்டப்படுகிறது. அமைச்சர் கூறிய மாத்திரத்தில் எதிர்க்கட்சி எழுந்து அதனை நிறைவேற்றும் போது அரசியல் தவிர்ந்த செயற்பாடு என்று எவ்வாறு கூற முடியும்.

அதற்காக எவரையும் சாடுவதில் பயனில்லை. நடந்த தவறை இந்த சபை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த சபையில் நீதிபதிகள் மீது அவதூறு தெரிவிக்கப்பட்டமைக்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மன்னிப்பு கோரினார்.

இது தற்காலிக தீர்ப்பாகும். அதற்காக நீதிபதிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவர்களை நான் தெரிவு செய்யவில்லை. பிரதம நீதியரசரால் தெரிவு செய்யப்பட்ட ராஜகருணாவை மேன்முறையீடு நீதிபதியாகநியமிக்குமாறுகோரிக்கை விடுக்கப்பட்டது

நாடாளுமன்றத்தின்சிறப்புரிமை என்ற போர்வையில் விமர்சிக்க முடியாது. இங்கு சிறப்புரிமை கிடையாது. நிலையியற் கட்டளைகளின்படிஅந்தப்பிரேரணை நிறைவேற்றப்படவில்லை. சபை எவ்வாறு செயற்பட முடியும்? எங்கள் பணியை நாம் செய்வோம். நீதிமன்றத்தின் வேலையை நீதிமன்றம் செய்கிறது.

அரசமைப்பின் 04 ஆவது சரத்தில் கைவைக்க முடியாது என்று நான் எப்போதும் கூறிவருகிறேன். நான் ஒருபோதும் நீதிபதிகளைக் குறை கூறியதில்லை. தீர்ப்புகளை நாம் விமர்சிக்கலாம். ஆனால் ஒரு நீதிபதிகளைக் குற்றம் சாட்ட முடியாது. அப்படியானால், அது நிலையியற் கட்டளையின் கீழ் செய்யப்பட வேண்டும். ஏன் இந்தச் சபையை அந்த நிலைமைமைக்குத் தள்ளுகிறோம்? இதற்கு முன் இப்படி நடந்ததில்லை. அதனால் தான் கவலையடைகிறேன்.

நெவில் சமரக்கோனுக்கு எதிராக எமக்கு செயற்பட வேண்டியிருந்தது. முதலில் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் அவரின் செயற்பாடுகள் குறித்து விவாதிக்க அனுமதி பெற்றோம். மேலும், 70 களில் ஐக்கிய தேசியக் கட்சியில் எம்முடன் இணைந்து செயற்பட்ட ஒருவர் தான் ரெகவ. இறுதியில் அவரை தேர்தலில் போட்டியிடுமாறு ஜனாதிபதி பிரேமதாஸ கேட்டுக்கொண்டார். அவர் இந்தசபையில் உபதலைவராக செயற்பட்டார். அவரை நாம் ஏன் விமர்சிக்க வேண்டும். அவரை ஜனாதிபதி பிரேமதாஸ நம்பினார். நானும் அவரைநம்பியஒருவர். நான் அவரை வியட்நாமுக்கான தூதராக அனுப்பினேன். அவர் ஒரு நல்ல மனிதர். அவரின் மகனையும் நான் அறிவேன். அவர்கள் இந்த விடயங்களில் தொடர்புபட்டுள்ளார் என்று நினைக்கவில்லை. எங்களுடன் இருந்து எங்களுடன் பணியாற்றியவரை விமர்சிப்பது குறித்து கவலையடைகிறேன்.

இங்கு நாம் நிலையியற் கட்டளைகள் குறித்து கவனம் செலுத்தவேண்டும். நீதிமன்றத்துடன் முரண்பட முடியாது. மேலும், அரசமைப்புப் பேரவை என்பது நாடாளுமன்றத்தின் ஓர் அங்கம் அல்ல. அது நிறைவேற்று அதிகாரத்தின் ஓர் அங்கம். நியமனங்களை மேற்கொள்ளும் போது பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் பொருத்தமானதா இல்லையா என்று கூறுங்கள்.

இல்லாவிடின் பெயர்களைப் பரிந்துரைக்கும் பொறுப்பு அவர்களிடம் செல்லும். எனவே நீங்கள் செய்யும் எந்தவொரு செயலுக்கும் எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். ஆணையாளர்களின் பெயர்களுக்காகக் காத்திருக்கிறேன். இப்போது 3 மாதங்கள் ஆகிவிட்டது.

ஊழல் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆணைக்குழுவுக்கு பெயர்களை அனுப்புவதில்லை. இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் வினவினோம். ஒரு வார்த்தை தவறாக இருப்பது பிரச்சினையல்ல. நியமனம் செய்வதற்குப் பெயர்களை அனுப்புமாறு கூறினேன். எனக்கு எதிராக யார் வேண்டுமானாலும் வழக்கு தொடரலாம். இன்னும் இதனைஅங்கீகரிக்கமுடியாதுள்ளது.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டனவாகவோ வேறு தீர்ப்பு வழங்கப்பட்டதாகவோ எனக்கு பெயர் அனுப்பப்பட்டிருந்தால் நான் தான் அந்தப் பெயரைத் திருப்பி அனுப்ப முடிவு செய்தேன். அது தொடர்பில் உங்கள் கடிதம் கிடைத்தது. அதற்கு நான் நன்றி கூறுகிறேன். அரசமைப்பு சபையை இவ்வாறு நடத்த முடியாது.

தெரிவுக் குழுவை அமைத்து இதை எப்படிக் கையாள்வது என்பது பற்றி ஆராய்வோம். இந்த விவகாரத்தால் முழு நீதிமன்றமும் முடங்கியுள்ளது. தெரிவுக்குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் நான் பிரதமருக்குப் பரிந்துரைக்கிறேன்.

சட்டங்களை இயற்றுவதற்காக இந்த சட்டசபை உள்ளது. நாங்கள் சில சமயங்களில் ஒன்று இரண்டாக மாறும் வரை நாம் பணிகளைத் தொடங்க மாட்டோம். நடிப்பதற்காக மக்கள் எங்களுக்கு பணம் கொடுக்கவில்லை. சட்டங்களை இயற்றுவதற்குத்தான் பணம் செலுத்துகிறார்கள்.

எனவே முதல் ஒரு மணி நேரம் கழித்து நாம் முக்கிய பணிகளுக்குச் செல்ல வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். இது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடுகிறேன். தற்போது அடுத்த ஆண்டு பல புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றை இனியும் தள்ளிப் போட முடியாது.

அடுத்த ஆண்டுஎம்.பி.க்கள்தமது தொகுதிகளுக்கு செல்ல வேண்டும். அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள வேண்டும். அவற்றுக்கிடையில் இங்கு சிக்கிக் கொண்டிருக்க முடியாது. முதல்ஒருமணிநேரத்தின் பின்னர் பிரதான பணிகளை ஆரம்பிக்க வேண்டும்- என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

(05)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சைவ வழிபாட்டு மரபுகள்

ஆலயம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்கின்ற கருத்திற்கு இணங்க எமது சைவ வழிபாட்டு மரபுகளில் ஆலய வழிபாடும் ஒன்றாகும். அதாவது ஒரு ஊரில் ஆலயங்கள்இல்லாதிருந்தால்அங்குகுடியிப்பது சுடுகாட்டைப் போன்றதாகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். சைவர்களின் வழிபாட்டு மரபுகளான திருவிழாக்கள்நடாத்ததல்நாகத்தையெல்லாம்



தெய்வமாக வழிபடுதல் அன்னசத்திரங்கள் அமைத்தல்தண்ணீர்ப்பந்தல்கள்அமைத்தல் விலங்குகளுக்கு அவுறஞசிக்கற்களை அமைத்தல் தைப்பொங்கல் தீபாவளி வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களை சைவ மரபைக் கொண்டு கொண்டாடுதல் போன்றனவாகும்.

சைவவழிபாட்டுமுறைகளில்ஆலயங்கள் அமைத்த வழிபாடுநடாத்துவதும்ஒன்றாகும். 'ஆலயம் தொழுவுதும் சாலவும் நன்று' ஆலயங்கள் அமைத்த வழிபடுவது சிறப்பானதொன்றாகும். இறைவன் பக்தர்களுக்காக எழுந்தருளி அருக்கின்ற இடமே ஆலயம் ஆகும். ஆலயத்தில் புல்சை செய்யும் பக்தர்கள் சைவ முறைப்படி ஆசார ஒழுக்கத்தின்படி மாமிச உணவுகளை உண்ணாதுபுல்நூல்அணிந்துமிகச்சிறப்பாக ஆராதனை செய்வது சைவம் வகுத்த வழிமுறைகளே. கோவில் விழாக்களின் போது மக்கள் ஒன்ற கூடி ஒற்றுமையாக செயற்படுவதற்காகவே திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன.தேர்த்திருவிழாவின்போது மக்கள் ஒன்று கூடித் திரண்டு வழிபட்டாலே அத் தேர் நகரும் இதன் போது மக்கள் அனைவரும் சைவ கலாசாரப் புத்தாடைகள் அணிந்து அவ் ஆலய விழாவில் கலந்த கொள்வதும். சைவ வழிபாட்டு மரபையே எடுத்துக்காட்டுகின்றது.

மக்கள் தம் மனதிற்குள் பயத்தை ஏற்படுத்திய பொருட்களையெல்லாம் தெய்வமாக வழிபடுவது சைவ வழிபாட்டு மரபுகளில் கொண்டுவரப்பட்டது. அவற்றில் ஒன்றே நாக வழிபாடு நாகத்தைக் கண்டு பயப்படத் தொடங்கிய மக்கள் நாகபாம்பிற் கென்று கோவில்கள் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். நாகத்திற்குப்பால்ஊற்றுதல் கோவில் வைத்து வழிபடுதல் பொங்கல் பொங்குதல் போன்றனவும் சைவவழிபாட்டு மரபுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. உதாரணமாக கிளிநொச்சி நாகதம்பிரான் ஆலயம் நாகம்மாள் ஆலயம் போன்றனவும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இன்றும் இம்மறை பல பிரதேசங்களில் காணப்படுவதைக் காணலாம்.

"பசி வந்தால் பத்தும் பறக்கும் " என்ற சொல்வார்கள இதனால் எமது முன்னோர்கள் "அன்னசத்திரம்ஆயிரம்அமைத்தல்வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். பசிப்பிணியால் வாடும் சைவ வழிபாட்டு மரபுகள்ழகளுக்க ஒருவேளை உணவாவது உண்பதற்குமடங்கள்அமைத்துஉணவளித்து வருகின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டா நயினைதீவு நாகபுல்சனி அம்மன் ஆலயம் வெல்வச்சந்நிதி போன்ற ஆலயங்கள் எடுத்துக்காட்டுக்கள் ஆகும். மக்கள் உணவு இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகவே நாவலர் கஞ்சித்தொட்டி தர்மம் செய்தார். இவ்வாறுசைவவழிபாட்டமரபுகள்இன்னமும் பின்பற்றப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் ஆவுகராஞசுக்கல் நாடடுதல் போன்றனவும் சைவர்கள் பின்பற்றிய நடைமுறைகளாகும். நடைப்போக்காகச் செல்லும் வழிப்போக்கர்கள் தண்ணீர் அருந்திக்களைப்பாறி செல்வதற்காகவே தண்ணீப்பந்தல் அமைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல்ஐந்தறிவுள்ளவிலங்குகள் தமது உடல் கடிக்கும் பட்சத்தில் உராஞசுவதற்குஉதவியாகவே ஆவரோஞ்சுக்கல் அமைக் கப்பட்டது.எமதுசைவவழிபாட்டு மரபுகள் அனைவரினதும் நலன்களுக்காகவே அமைக்கப்பட்டது. சைவ விழிமியப் பண்புகளில் ஒன்றாக பிறருக்கு உதவுதல் என்பது சைவ மரபின் மூலமே வளர்க்கப்படுகின்றது.

சைவசமயத்தவர்கள்சைவ வழிபாட்டு மரபுகளின் படி ஒவ்வொரு காரணங்களிற்காக தங்களுக்கென்று ஒரு தினத்தைக் அதுவே தைப்பொங்கலாகும். கொண்டா டுகின்றனர். உழவர்கள்தங்கள் உழவுத்தொழில் சிறப்பாக அமைவதற்காகவும் மக்கள் உணவிற்குப் பஞ்சமின்றி சிறப்பாக வாழ்வதற்காகவும். அத்தினத்தைக கொண்டா டுகின்றனர். இதுவும் சைவர்களுடைய வழிபாட்டு மரபையேபறைசாற்றுகின்றது.

தீபாவளி வருடப்பிறப்பு பேன்றனவும் சைவ வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. தீபாவளி என்பதன் பொருள் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவதாகும் அத்தினம் நராசுரன் அழிந்ததால் மக்கள் அடைந்த சந்தோசத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. வருடப்பிறப்பு சித்திரப்புத்தாண்டு போன்றன வருடப்பிறப்பின் சந்தோசத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இதன் போது மருத்து நீர் வைத்து முழுகுவார்கள். நாங்கள் இவ்வளவு காலமும் செய்த பாவங்கள் ஒழிவற்காகவே அத்தினம் கொண் டாடப்படுகின்றது. இவையும் சைவ வழிபாட்டு மரபு முறை களையேபறைசாற்றுகின்றன.

இவை போன்ற பல சைவ வழிபாட்டு மரபுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

பல நூற்றாண்டு காலமாக அந்நிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் சைவம் வீழ்ச்சியுற்றது. அத்தோடு சைவ வழிபாட்டு




மரபுகளும் மழுங்கடிக்கப்பட்டிருந்தன. ஒல்லாந்தர்கள் காலத்தில் சைவர்கள் வழிபடுவதற்கு இடம் இல்லாமல் சூலத்தை தங்கள் வீட்டில் வைத்து வழிபட்டார்கள். நெற்றியிரல் திருநீறு புல்ச அனுமதியம் வழுங்கப்படவில்லை. அத்தோடு அவர்கள் தங்கள் விரத காலங்களில் இலைகளில் சாப்பிடும்உரிமையும்இழந்தனர்.சைவமக்கள் தங்களடைய சைவ மரபகளைக் கடைப்பிடிக்க இயலாமல் வேற மதங்களுக்கும் மதமாற்றம் பெற்றனர். ஆனால் இவற்றையெல்லாம் இல்லாதொழிக்க வேண்டும் என்று ஐந்தாம் சைவகுரவரானஆறுமுகநாவலர்முன்வந்தார். சிறிலசிறி ஆறுமுக நாவலர் சைவத்திற்க ஆற்றிய பணிகள் அளப்பரியன. அவர் சைவ வழிபாட்டு மரபுகள் அழியகட்கூடாது என்று சைவப்பாடசாலைகளை அமைத்தல் சைவ நூல்களை இயற்றல் சைவப்பிரசங்கங்களை நடாத்துதல் போன்ற பணிகளையும் செய்வதோடுஅச்சியந்திரசாலையைஅமைத்து பாமரமக்களும்விளங்கிக்கொள்ளும்வகையில் பல நூல்களை இயற்றினார். இவைபேன்ற பலபணிகளைசைவத்திற்குப்பணியாற்றினார் அந்தவகையில் சைவ வழிபாட்டு முறைகள் மழுங்கடிக்கக்கூடாது என பல சைவ சமய இனத்தவர்கள் அரும்பாடுபட்டார்கள்அன்னும் சைவ மரபுகள் பின்பற்றப்படவேண்டும் நாம் அனைவரும் சைவ வழிபாட்டு மரபுகளை பின்பற்றி இன்பமாக வாழ்வோம்.

**தவக்குமார் டிசாளினி,**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி.**

# கார்த்திகைக் குமரனைப் போற்றுவோம்

**அறுசமய சாத்திரப் பொருளோனே**
**அறிவில் அறிவால் உணர் கழலோனே**
**குறுமுனிவர் ஏத்தும் முத்தமிழோனே**
**குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.**
என்று பாடுவார் அருணகிரிநாதப்பெருமான்.



முருகப்பெருமானுக்கு கார்த்திகேயன் என்று திருநாமம். அவனுக்கு கார்த்திகை நக்ஷத்திர வழிபாடு சிறப்பு.

--

கார்த்திகையை வடமொழியில் கிருத்திகை என்று சொல்வர். எனவே, மாதம் தோறும் வரும் இந்த கிருத்திகை / கார்த்திகை நக்ஷத்திரங்களில் முருக வழிபாடு சிறப்புறச் செய்வர்.

--

இப்படிமாதா மாதம் கார்த்திகை நக்ஷத்திரங்கள் சிறப்பு ஆயினும் கார்த்திகை என்ற பெயர் கொண்ட மாதம் முழுமையும் மிகவும் சிறப்புடையது.

--

இந்த கார்த்திகை மாத வளர்பிறை சஷ்டி ஸ்கந்த சஷ்டி எனப்படுகிறது. அந்த மாத வெள்ளி கிழமைகள் கூட முருக வணக்கத்திற்கு வெகு சிறப்பு பெறுகிறது.

--

உடனே, ஐப்பசி மாதத்தில் கூட கந்த சஷ்டி வருமே ? என்று கேட்பீர்கள். ஆம் அது தமிழ் மரபில் சௌரமான படி ஐப்பசி ஆயினும், சாந்திரமானப்படி கார்த்திகை ஆகும்.

--

சாந்திரமானம் என்பது அமாவாசையை அடுத்து ஆரம்பிக்கும். எனவே, தீபாவளி அமாவாசைக்கு அடுத்த நாள் சாந்திரமான கார்த்திகை தொடங்கி விடும்.

--

அதையும் எங்கள் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருப்பார்கள். உதாரணமாக, கொக்குவில் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் 'கிருத்திகா சுத்தம்' என்றும், மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கம் 'கார்த்திக சுத்தம்' என்றும் குறிப்பிட்டிருக்க காணலாம்.

--

இந்த நாளில் தான் ஸ்கந்தசஷ்டி விரதம் ஆரம்பிக்கிறது. ஆக, சாந்த்ரமான கார்த்திகை மாத ஆரம்பநாளிலேயே முருகவழிபாடு மிகச்சிறப்பாக தொடங்கி விடுகிறது. அது சௌரமான கார்த்திகையிலும் நீள்கிறது.

--

எனவே, கார்த்திகை மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமை வார விரதம், சஷ்டி திதி விரதம், கார்த்திகை நக்ஷத்திர விரதம் எல்லாமே முதன்மை பெறுகிறது.

--

அந்த கார்த்திகேயக் கடவுள் எங்களை காத்தருள வேண்டுவோம்.

--

**கார்திகேய கருணாம்ரு'தராக்ஷே**
**கார்திகே யதஹ்ரு'தாக்ஷ தவ பூஜா .**
**பூர்தயே ப⁴வதி வாஞ்சிதைபங்க்தே:**
**கீர்தயே ச ரசிதா மனுஜேன ..**

**மயூரகிரி சிவாச்சார்யார்**


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# விடுதலைப் புலிகளுடன் கூட்டமைப்பையும் ஒழித்திருக்க வேண்டுமென்கிறார் வீரசேகர

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடை செய்யாமல், மஹிந்த ராஜபக்க பெரிய தவறை இழைத்து விட்டார் என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற குழு நிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவாகும்.

இந்தக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோது, அவர்கள் முதன் முதலாக பிரபாகரன் முன்னிலையில் தான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள்.

உண்மையில், மஹிந்த ராஜபக்ஷ பெரிய தவறொன்றை இழைத்துவிட்டார். ஹிட்லர் இறந்தவுடன், அவரது நாஜி கட்சி இல்லாது போனது.

பொல் போட் இறந்தபின்னர் அவரது கம்யூனிஸிய கட்சி இல்லாமல் செய்யப்பட்டது.

சதாம் உசைன் இறந்தபோதும், முபாரக் இறந்தபோதும் அவர்களது அரசியல் கட்சிகள் இல்லாது செய்யப்பட்டன.

ஆனால், எல்.ரி.ரி.ஈ. எனும் உலகிலேயே மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர், அவர்களது அரசியல் கட்சியான ரி.என்.ஏ.வை நாம் தடை செய்யவில்லை.

மஹிந்தராஜபக்ஷஅவர்களுக்குகாண்பித்த இரக்கம் தான், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு காரணமாக மாறியுள்ளது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)



# 10 பில்லியன் ரூபாய் தேர்தலுக்கு ஒதுக்கீடு

## ரஞ்சித் சியம்பலபிடிய தகவல்



எதிர்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்களுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது வரவு செலவுத் திட்டத்தில் நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும்கூடமதிப்பீட்டுஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அரச பெருந்தோட்ட தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு தொடர்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்தார்.

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணையை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரஞ்சித் சியம்பலாபிடிய -

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் எமது வருமானம், நிர்ணயித்த இலக்குத் தொகையில் 16 வீதம் குறைவடைந்தது. வீழ்ச்சியடைந்த பொருளாதார ஆண்டில், எதிர்பார்த்த இலக்கைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவது இயல்பானதொரு நிலையாகும். வரவு செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்கும் போது, முதன்மைக் கணக்கை மேலதிகமாக வைத்திருக்கும் இலக்குடன் நகர்வதில் கடுமையான தடைகளை நாம் எதிர்கொள்கிறோம்.

மேலும், வருமானத்தை விட அதிக செலவுகள் ஏற்படுவதனால்வரவுசெலவுத்திட்டப்பற்றாக்குறையுடன் செயற்படவேண்டியுள்ளது. அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்யத் தேவையான தொகையை கடனாகப் பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் எதிர்வரும் ஆண்டில், கடன் பெறுவதற்கான சாத்தியம் குறைவாகவே உள்ளன. இதுவரை உள்ளநாட்டுக் கடன் பெறுவதில் பல எளிய வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. மத்திய வங்கியின் புதிய சட்டத்தின் பிரகாரம், மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட அவசர நிலைமை அறிவிக்கப்படும் போது மாத்திரமே கடன் பெறமுடியும் எனக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமுன்வைக்கப்பட்டவரவுசெலவுத்திட்டம் ஒருதேர்தல்பட்ஜெட்என்றுசிலர்குற்றம்சாட்டுகின்றனர். ஆனால் பொருளாதார ரீதியில் கடுமையானஅழுத்தங்களுக்கு உள்ளான மக்களின் பிரச்சினைகளுக்கு விடை காணவேண்டியநிலையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மேலும் எதிர்காலத்தில் நடைபெற உள்ள எந்தவொரு தேர்தலுக்காகவும் 10 பில்லியன் ரூபாவை நாம் ஒதுக்கியுள்ளோம். வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளில் இவை நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும் கூட மதிப்பீட்டுஆவணங்களில்அதுஉள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த உலகில் வரி வருமானமோ, அரச வருமானமோ இன்றி முன்னேறிய நாடு இல்லை. அதை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதே ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரச வருமானம் தொடர்பான விடயத்தை பொறுத்தவரை நாம் பொறுப்பேற்கும்போது, நாட்டில் 80 வீதம் மறைமுக வரியே காணப்பட்டது. 20 வீதம் ஆக இருந்த நேரடி வரிகளைத் தற்போது சுமார் 30 வீதம் அளவுக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டின் அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை, 05 வீதம் ஆக பேணப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அது நடைமுறையில் சாத்தியமற்றது. கடந்த 20 வருடங்களில், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாத்திரமே வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை 05 வீத இலக்கில் பேண முடிந்தது. அவ்வாறு தொடர்ச்சியாக அதனைப் பேண வேண்டுமாயின், பாரிய அளவில் அரச செலவுகளைக் குறைத்து அரசாங்கம் வருமானம் ஈட்ட வேண்டியது அவசியமாகும். ஆனால் 65 பில்லியனாக இருந்த எமது அரச நலன்புரிச் செலவுகள் இந்த ஆண்டு சுமார் 209 பில்லியனாக உயர்வடைந்துள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அரசின் ஸ்திரத்தன்மை காரணமாக அப்போது நாட்டில் நிலவிய நம்பிக்கையற்ற நிலையை, மிகக் குறுகிய காலத்தில் இல்லாமலாக்க நாம் நடவடிக்கை எடுத்ததோடு, ஊழல்தடுப்புச்சட்டத்தைஅமுல்படுத்தவும் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். மேலும் பணவீக்க அதிகரிப்பு வேகத்தைக் கட்டுப்படுத்த அவசியமான பணிகளையும் முன்னெடுத்துள்ளோம்.

மேலும், இணையவழியில்வரிதகவல்சேகரிப்புத் திட்டம் மற்றும் "ரெமிஸ் 2.0" திட்டத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும் எதிர்வரும் இரண்டு வாரங்கள் இலங்கைக்கு பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியமான காலகட்டமாக இருக்கின்றது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு கூடவுள்ளது. மேலும், இந்த வருட இறுதிக்குள் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகளை நிறைவுசெய்யவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய மேலும் தெரிவித்தார். (05)

# மாவீரர் வாரத்தை முன்னிட்டு கட்டப்பட்ட கொடிகள் அறுப்பு



யாழ். மாவட்டத்தில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு, கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகில் கட்டப்பட்டிருந்த சிவப்பு - மஞ்சள் கொடிகள் இனம்தெரியாத நபர்களால் அறுத்தெறியப்பட்டுள்ளன.

துயிலும் இல்லம் அமைந்திருந்த காணியில் இராணுவ முகாம் தற்போது காணப்படும்நிலையில், அருகில் உள்ள காணி மற்றும் வீதிகளில் சிவப்பு - மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

அதனை புதன்கிழமை இரவு இனம் தெரியாத நபர்கள் அறுத்து சென்றுள்ளனர் என சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரான செ. மயூரன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை அந்த இடத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் கட்டப்பட்ட கொடிகள் அறுக்கப்பட வில்லைஎனவும்,தாம்கட்டியகொடிகளை மட்டுமே அறுக்கப்பட்டுள்ளமைஎன்பது திட்டமிட்ட செயல் என சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பாக பொலிஸார் தகுந்த விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய வேண்டும்எனமுன்னாள்உபதவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார். (05)

# தேர்தலைப் பிற்போடும் ஆளும் தரப்பு பிரிட்டன் தூதரிடம் அனுர சுட்டிக்காட்டு



*ஜேவிபி தலைவர் அனுரகுமாரதிசநாயக்க இலங்கைக்கான பிரிட்டனின் தூதுவர் அன்ரூ பட்ரிக்கை சந்தித்து பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.*

*இந்த சந்திப்பில் விஜிதஹேரத்தும் கலந்து கொண்டுள்ளார்.*

*பிரிட்டன் தூதுவருடனான சந்திப்பின்போது இலங்கையின் சமீபத்தையபொருளாதாரநிலை குறித்து ஆராயபட்டதாக ருவிட்டரில் தெரிவித்துள்ள அனுரகு மாரதிசநாயக்க தேர்தல்களை நடத்தாமலிருக்கும் அரசாங்கத்தின்ஜனநாயகவிரோத நடத்தை குறித்து சுட்டிக் காட்டியுள்ளதாகவும் தெரிவித் துள்ளார். (05)*

காலைக்கதிர் Kalaikkathir




## பல வைத்தியசாலைகளில் சிறிஞ்களுக்கு தட்டுப்பாடு

நாட்டில் உள்ள பல அரச வைத்தியசாலைகளில் சிரிஞ்ச்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட சிரிஞ்ச் ரெண்டர் தொடர்பான சிரிஞ்களின் தரம் மோசமடைந்ததால் மருத்துவ வழங்கல் துறையால் விநியோகம் நிறுத்தப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுகுறித்து சுகாதார பணியாளர்கள் கூறுகையில -

மருத்துவ வழங்கல் பிரிவில் 10 மில்லி மற்றும் 20 மில்லி சிரிஞ் இருப்பு இல்லை. மருத்துவமனைகளில் தற்போது 5 மிமீ ஊசிகளின் இருப்பு மட்டுமே உள்ளது . 20 மில்லி மற்றும் 10 மில்லி சிரிஞ்களுக்கு மாற்றீடாக சிறிய சிரிஞ்கள் பயன்டுத்தப்படுவதால், அந்த ஊசிகளின் இருப்பும் அடுத்த மாதத்தில் தீர்ந்துவிடும் என்று சுகாதார ஊழியர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (05)

## விளக்கமறியல்

கலகெதர நீதிவான் நீதிமன்ற சுற்றுவட்டாரத்தில் 12 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 58 வயதுடைய நபர் ஆவார்.

குறித்த சிறுமி தனது தாயுடன் இருக்கையில் அமர்ந்திருக்கும்போதே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

குற்றம் சுமத்தப்பட்டவர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கலகெதர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)

## ஹாலிஎல மண்சரிவில் சிக்கி இரண்டு யுவதிகள் உயிரிழப்பு

பதுளை -ஹாலிஎல - உடுவர 6ஆம் கட்டை பகுதியிலுள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர்.

ஹாலிஎல பிரதேசத்தில் பெய்த கன மழை காரணமாக ஹாலிஎல உடுவர 6 ஆவது மைல்கல் பகுதியில் உள்ள கந்தகொல்ல பத்தனையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன்போது அதற்கு அருகில் இருந்த வீடொன்றில் வசித்து வந்த இரண்டு யுவதிகள் மண் சரிவில் சிக்கினர்.

இவ்வாறு மண்சரிவில் சிக்கிய இரு யுவதிகளும் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டபோதும் அவர்கள் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஒருவருக்கு ஒரு கிலோ மட்டுமே: சதொசவில் இனி சீனி விற்பனை



வெள்ளை சீனி கிலோ கிராம் ரூ.275 இற்கு தொடர்ந்து விற்பனை செய்யவுள்ளதாக லங்கா சதொச முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி வாடிக்கையாளர் ஒருவருக்கு தலா ரூ. 275 இல் ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனி மாத்திரமே வழங்கப்படும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிவப்பு சீனி கிலோ ஒன்று ரூ.330 வாக விற்பனை செய்யப்படுவதுடன், வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கப்படும் சீனியின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சில லங்கா சதொச கடைகளில் வெள்ளை சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2023இல் வெளியிடப்பெற்றது.